52

THE "VAKIL" TAMIL LAW MONTHLY FOR THE PUBLIC

"வக்கீல்"

பொதுமக்களுக்கு தேவையான புதிய சட்ட விதிகளை உடனுக்குடன் விளக்கும் தமிழ் மாதப்பத்திரிகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 FEB 1950
MADRAS

பிப்ரவரி 1950

522
7.50

இந்த இதழில்

நமக்குச் சட்டம் செய்வது யார்-எப்படி?

புதுக்கோட்டை சட்டங்கள்

வழக்கும் - தீர்ப்பும்

கேள்வி-பதில்

ஜமீன் இனும் ஒழிப்பு விதிகள்

டிரஸ்ட் பத்திரங்கள்

மற்ற கண்ட்ரோல் உத்தரவுகள்

★



★

தபால் பெட்டி நெ. 26. கும்பகோணம்.

தனிப்பிரதி அணா 4
வருட சந்தா ரூ 3

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57 தந்தி விலாசம் "கோகுல்"

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

REGISTERED TRADE MARK

(பிராஞ்சு: மன்னார்குடி)

கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும்
கொடுப்பதில் நிகரற்ற

சந்தனாதித்தைலம். அரைக்கீரைவிதைத்தைலம்,

கோகுல் கூந்தல் தைலம்

வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்
பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

SOLE AGENTS:

For Madras
Suraj Agencies,
Madras.

For Coimbatore, Palghat & Nilgiris
B. Balapattabi Chettiar,
246, Vysyal St, Coimbatore.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
FEB 1950
MADRAS

"வக்கீல்"
பொதுமக்களுக்கான உயர்தர
மாத சட்ட வெளியீடு.

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B. A., B. L.,
,, G. நாகராஜபத்தர், B. A., B. L.,
,, V. தியாகராஜன், B. A., B. L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B. A., B. L.,
,, S. சாம்பசிவய்யர், B. A., B. L.,
,, T. S. வெங்கடராமன், B. A., B. L.,
,, R. கோபாலசாமி, B. A., B. L.
,, R. கிருஷ்ணமூர்த்தி, B. A., B. L.,
,, V. S. விஜயராகவாச்சாரி, B. A., B. L.

"வக்கீல்"
(சந்தா விபரம்)

வருட சந்தா ... ... ரூ.	3—0—0
தனிப் பிரதி (வெளிவரும் மாதத்தில்) ...	0—4—0
முந்திய மாதப் பிரதி ...	0—6—0
வெளிநாடு வருட சந்தா ...	6—0—0

"வக்கீல்" காரியாலயம்
தபால்பெட்டி நெ. 26 :: கும்பகோணம்

"வக்கீல்"

பொது மக்களுக்கான சட்ட
விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 2 பிப்ரவரி '50 இதழ் 2

பொருள் அடக்கம்

குறிப்புகள் 3
நமக்குச் சட்டம் செய்வது யார் - எப்படி? 5
புதுக்கோட்டை சட்டங்கள் 11
தொழிற் தகராறு சட்டம் 12
வழக்கும் - தீர்ப்பும் 13
கேள்வியும் - பதிலும் 17
பத்திரங்கள் - "டிரஸ்டு பத்திரங்கள்" 21
கண்ட்ரோல் - லைசென்ஸ் - ரேஷன் விலை நிர்ணயம் - இதர சர்க்கார் அறிக்கைகள் 22

சந்தாதாரர்கள் கவனிக்கவும்

1. வருட சந்தாதாரர்களாகச் சேருபவர்களுக்கு சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 இதழ்கள் அனுப்பப்படும். முந்திய மாத இதழ்கள் தேவையானால் பிரதி 1-க்கு அணு 6 வீதம் சேர்த்து அனுப்ப வேண்டும். கைவசம் இருக்கும் முந்திய மாதப் பிரதிகளை மட்டில்தான் அனுப்பக்கூடும். "வக்கீல்" பத்திரிகை 1949 வரு ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.
2. ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
3. சந்தாதாரர்களாகச் சேர விரும்பும் நேயர்கள் தங்கள் விலாசத்தை கொட்டை எழுத்தில் தனித்தனி எழுத்தாக எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.
4. "வக்கீல்" பத்திரிகை சாதாரணமாய் ஒவ்வொரு இங்கிலீஷ் மாதமும் முதல் தேதியிலேயே பிரசுரம் செய்யப்படும். பிரதிகள் வரவில்லை என்று தெரிவிக்கும் வருட சந்தாதாரர்கள் ஒவ்வொரு மாதமும் 15-ம் தேதிக்குள் எழுதும்படிக்கும் அவர்கள் சந்தா நெம்பரைத் தெரிவிக்கும்படிக்கும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
5. டிராவலிங் ஏஜண்ட் மூலம் சந்தா செலுத்தும் சந்தாதாரர்கள் உடனே ஆபீசுக்கு கீழ்கண்ட விபரங்களை நேரில் கார்டுமூலம் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (1) பெயரும்-விலாசமும். (2) ரசீது நம்பர்-தேதி-ரூபாய். (3) எந்த மாதம் முதல் சந்தா. (4) எந்த மாதப் பத்திரிகைகள் ஏஜண்டால் கொடுக்கப்பட்டது.

கியாரண்டியுள்ள பட்டு சேலைகள்
நூதன பார்டர்களில்
எமது சொந்த தறியில் தயார் செய்தது.
வியாபாரிகளுக்கு மொத்தமாக சப்ளை செய்கிறோம்.
ரு.ம.தி. சிதம்பர முதலியார், ஆண்டியப்ப முதலியார் தெரு, கும்பகோணம்.

விலை நயம்! ஒரே விலை!!
பட்டு & நூல் ஜவுளிகள், நவீன திணுசுகளில்,
நியூ பனாரஸ் ஹால்
கும்பகோணம்.
எப்பொழுதும் கிடைக்கும்.
BY C.A.B

சவுத் இந்தியன்
சோப் ஒர்க்ஸ்
P. B. No. 38
தஞ்சாவூர்
தயாரிப்புகள் :—
அப்ஜா—ஆனந்தா—கதம்பா
ரஞ்சிதா—நீரடிமுத்து
நறுமணங்கமழும் ஸ்நான சோப்புகள்
யாவராலும் போற்றப்படுபவை.
மொத்த வியாபாரிகள் மட்டுமே
தேவைக்கு எழுதவும்.

187696

கல்யாண பட்டு நூல்
ஜவுளிகளுக்கு
ராதா ஸில்க் எம்போரியம்
119, பெரியதெரு :: கும்பகோணம்.
போன் நெ. 83

கைத்தறி ஜவுளி
பட்டு புடவைகள்
100 நீ. கலர் நூல்சேலைகள்
100 நீ. வேஷ்டி, துப்பட்டாக்கள்
உற்பத்தியாளர் :—
P. R. Srinivasa Iyengar
45, Kadalangudy Street,
KUMBAKONAM.

பெட்கும் லேட்டுத் திரி, பட்டுக் கயிறு,
பின்னல்கயிறு, தாலிக்கயிறு, இடுப்புக்கயிறு
முதலியவைகளுக்கு எழுதவும்.
சாம்பிள் இனாம்.
ஸ்ரீ ஜானகி & Co.,
39/A பால்மால் குறுக்குத்தெரு மதுரை.

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 2 பிப்ரவரி 1950 இதழ் 2

குறிப்புகள்

வணக்கம்: சுதந்திர இந்தியக் குடி அரசுக்கும் சட்ட பூர்வமாய் அமைக்கப் பெற்றுள்ள ஆட்சி முறைக்கும் "வக்கீல்" பத்திரிகையின் வணக்கம். நமது ஜனாதிபதி முதலில் தொடங்கி நீதிபதிகள், மந்திரிமார்கள், பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் யாவரும் செய்து கொண்ட குடி அரசு விசுவாசப் பிரமாணத்தை, பாரத நாட்டின் ஒவ்வொரு மக்களும் செய்து கொண்டு, அதன் பொருளை உணர்ந்து நடக்க வேண்டுமென்ற மனப்பான்மையுடன், குடி அரசு அமைந்த பிறகு வெளியாகும் இந்த இதழ் மூலம் "வக்கீல்" தன்னுடைய குடியரசு விசுவாசப் பிரமாணத்தை எடுத்துக் கொள்ளுகின்றது. "வக்கீல்" இரண்டு வகைகளில் இப்பிரமாணத்தை நடைமுறையில் மேற்கொள்ளும், முதலாவதாக: பொது மக்களுக்காக இந்நாட்டில் இயற்றப்பட்டு வரும் சட்டதிட்டங்கள் என்ன என்ன என்று மக்களின் பாஷையில் விளக்கும். இரண்டாவதாக, பொதுமக்களைப் பாதிக்கும் விதம், நிர்வாகம் செய்யும் அதிகார வர்க்கத்தினர் சட்ட வரம்பைத் தாண்டினால், அதைச் சுட்டிக்காட்டும்.

ஜனவரி 26. இந்தத் தேதியை இனி எந்நாளும் மறக்காதீர்கள். 1950 ஜனவரி 26-ஆம் தேதி இந்தியா ஒரு குடியரசாக மாறியது. எப்படி ஒரு அமெரிக்கன் ஜுலை 4-ஆம் தேதியையும், ஒரு ருஷ்யன் மே 1-ஆம் தேதியையும் கொண்டாடுகின்றனோ அவ்விதவே இனி நாமும் ஒவ்வொரு ஜனவரி 26-ஆம் தேதியையும் கொண்டாடுவோம்.

சட்டம் வகுப்பவரே! ஐயா! இந்தியா சுதந்திரம் அடைந்த தினத்தன்று தாங்கள் இந்திய பார்லிமெண்டிலோ, ராஜ்ய சட்ட சபையிலோ ஒரு அங்கத்தினராக இருப்பது தங்களுடைய பாக்கியம். தங்களிடம் ஏதோ ஒரு விசேஷ குணத்தினால் அல்லவா தாங்கள் இப்பதவியில் இருக்கின்றீர்கள். தங்களுடைய தியாகத்தினாலோ, புத்திக் கூர்மையினாலோ, அல்லது தங்களுடைய நல்லியற்கையினாலோ தாங்கள் (தலைவர்களின் சிபார்சின் பேரில்) பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றீர்கள். புதிய அரசியல் அமைப்பில் இந்நாட்டின் முப்பதுகோடி மக்களின் எதிர்கால வாழ்க்கையைத் தங்கள் கையில் ஒப்படைத்திருக்கிறோம். தாங்கள் இஷ்டப்படி எந்தச் சட்டம் வேண்டுமானாலும் வகுக்கலாம். உங்களில் பெரும்பான்மையோரின் இஷ்டம் எதுவோ அதுதான்

இனி நாட்டில் 'சட்டம்' என்று வழங்கப்பெறும். நீங்கள் இஷ்டப்பட்டால் மந்திரிகளைத் தள்ளி வேறு மந்திரிகளை நியமிக்கலாம். இவ்விதப் பொறுப்பைத் தாங்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக உணர்ந்து, நீங்கள் செய்யும் குடி அரசு விசுவாசப் பிரமாணத்தின்படி உங்கள் கடமையைச் செம்மைபெறச் செய்தால்தான் இந்நாடு ஒரு பேராபத்திலிருந்து தப்பி வாழ முடியும். ஆங்கிலேயனின் பிடியிலிருந்து தப்பிக்கொண்ட இந்த நாட்டின் மக்களாகிய நாங்கள் இரு தலைப்பாம்பு ஒன்றின் தொண்டையில் சிக்கிக் கொண்டிருக்கிறோம். கள்ளமார்க்கெட் துரோகிகளும் அவர்களுக்கு இடம் கொடுக்கும் இலஞ்சம் வாங்கும் சில அதிகாரிகளும் தான் இப்படி எங்களை விழுங்கித் தொண்டையில் வைத்துக்கொண்டிருக்கின்றனர். ஐயா! பொது மக்களாகிய எங்கள் உழைப்பெல்லாம் இவர்களின் செல்வத்தையும், அந்தஸ்தையும் உயர்த்தத்தான் உபயோகப்படுத்தப்படுகின்றது.

எங்களை இப்பாம்பின் வாயிலிருந்து விடுவிக்க வேண்டியது உங்கள் முதல் கடமையாகும். இவ்விதம் செய்ய உங்களால் முடியாவிட்டால், பக்கத்தில் வேடிக்கைப் பார்த்து நிற்கும் ஒரு சிகப்பு உடை மனிதன் அதைச்செய்ய முன்வருவான். அவன் பெயர் 'பொது உடமைக்காரன்'. அவன் நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற பதவிக்குச் சட்டப்படி வந்து, அக்காரியத்தைச் செய்தால் அவ்வளவு பாதகமில்லை. ஆனால், அவன் அப்படிச் செய்யமாட்டான். அவனுடைய கொள்கையே வேறு.

முதலில் எல்லாவற்றையும் தீக்கு இரையாக்கினால் வேலை சுலபமாகுமென்ற மனப்பான்மை கொண்டவன். அவன் பாம்பையும் எரிப்பான். பாம்பை அடிக்கும் தடியையும் எரித்து விடுவான். ஐயா! எங்களைப் பாம்பின் வாயிலிருந்தும், தீயின் வாயிலிருந்தும் தப்புவிக்க உங்களால் முடியுமா? முடியாவிட்டால் கால தாமதம் செய்யாமல் அதை எங்களிடம் சொல்லிவிடுங்கள்!

எங்கள் தவறை மன்னிக்கவும்! "வக்கீல்" சென்ற மாத இதழில் குடியரசு இந்தியாவின் நிலப்பரப்பைக் காண்பிக்கும் ஒரு அட்டைப் படம் வெளியிட்டிருந்தோம். அதில் ஒரு தவறு செய்துவிட்டோம். இந்தியாவைச் சேர்ந்த அந்தமான், நிக்கோபார் தீவுகளைக் காண்பிக்காமலிருந்துவிட்டோம். ஜனவரி மாத இதழ் வெளியான மறு தினத்திலிருந்தே இத்தவறைச் சுட்டிக் காட்டி, பல நேயர்களிடமிருந்து "வக்கீலுக்கு" கடிதங்கள் வந்தன. சொந்த நிலத்தை யார்தான் இழப்பார்கள்? குடி அரசும் அப்படியேதான். தமக்குச் சொந்தமான எந்த இடத்தையும் படத்தில்கூட இழக்க நமது குடியரசு இனி சம்மதிக்காது. அதுவும் "சிங்களம், புட்பகம், சாவக மாகிய தீவு பலவினுஞ் சென்றேறி அங்கு தங்கள் புலிக்கொடி, மீன்கொடியும் நின்று சால்புறக் கண்ட" செந்தமிழ் நாட்டினரா மறந்துவிடுவார்கள்? ஆயிரம் வருடங்களானால் என்ன? தூக்கம் தெளிந்ததும் எல்லாம் ஞாபகம் வந்துவிட்டது போலும்! நாங்களும் தவறை ஒப்புக்கொண்டு நமது தேசத்தைச் சேர்ந்த இடங்கள் ஒன்றையும் விடாமல் காண்பிக்கக்கூடிய படத்தை இம்மாத அட்டையில் வெளியிட்டிருக்கிறோம். எங்கள் தவறை மன்னிக்கவும்.

புதிய சட்டங்கள்

இந்தியக் குடியரசு அமைப்புச் சட்டம்

நமக்குச் சட்டம் செய்வது யார் - எப்படி ?

குடி அரசு இந்தியாவில் இனி நமக்குச் சட்டங்கள் செய்வது யார் என்பதையும், சட்டங்கள் எப்படி ஏற்படுத்தப்படுகின்றன என்பதையும் இன்று கவனிப்போம். அரசியல் அமைப்புச் சட்டத்தில் இது சம்பந்தமாய் உள்ள எல்லா விஷயங்களையும் சேர்த்துப் பார்ப்போம்.

மனித சமூகத்திற்குச் சட்டம் இன்றியமையாதது. சட்ட திட்டங்கள் இல்லாமல் எந்தச் சமூகமும் முன்னேற்றமடைய முடியாது. சட்டங்களே இல்லாவிட்டால் என்ன நேரிடுமென்று மனதில் ஒரு நிமிஷம் கற்பனை செய்துகொண்டோமானால் உடனே ஒரே முடிவுக்குத்தான் வருவோம். அதாவது யார் சட்டம் செய்தாலும் அவ்வளவு பாதகமில்லை; ஆனால், 'சட்டம்' என்பது அவசியமாக இருந்தேதீரவேண்டுமென்ற முடிவுக்குத்தான் வருவோம். நமது உயிர், உடல், பொருள் இவைகளை எல்லாம் காப்பாற்றுவது சட்டத்தின் ஆணைதான்; சந்தேகமில்லை. அன்னிய ஆட்சியில் ஏற்பட்ட சட்டங்கள்கூட இவைகளை நன்கு காப்பாற்றின. ஆனால், இவைகளைவிட மதிப்புயர்ந்த நமது தனிப்பெரும் நாகரீகத்தையும், உன்னத லட்சியங்கள் கொண்ட நமது கலைகளையும், நமது பண்பாட்டையும் காப்பாற்ற அன்னியர்களால் ஏற்படுத்தப்பட்ட எந்தச் சட்டங்களுக்கும் சக்தி கிடையாது. இனி இவைகளையும் காப்பாற்றச் சக்திவாய்ந்த சட்டங்களையும் நமக்கு நாமே ஏற்படுத்திக்கொள்ளலாம். அது எப்படி என்று பார்ப்போம்.

நடைமுறையில் நாம் கீழ்ப்படிய வேண்டிய 'சட்டங்கள்' பலவகைப்பட்ட ஸ்தாபனங்களாலும், தனி அதிகாரிகளாலும், செய்யப்படுகின்றன. இவைகள் சட்டங்கள், விதிகள், உத்தரவுகள் என்று பல பெயர்களுடன் இருப்பதுடன் சில விஷயங்களில் சட்டம் செய்யும் அதிகாரம் படிப்படியாகக் கீழே வந்து ஒரு ஜில்லா அதிகாரியால் பிறப்பிக்கப்படும் உத்திரவுகள் கூட, 'சட்டம்' என்ற பெயருடன் விளங்கும். எந்த வகையான சட்டம் மீறப்பட்டாலும் அதை மீறியதற்கான தண்டனை அல்லது நஷ்டம் உண்டு. சட்டத்தை மீறியவர்கள் நீதி ஸ்தலங்களில் எந்தக் கட்சி சொன்னாலும், சொல்லாவிட்டாலும் அவர்கள் ஒரு கட்சிமட்டும் சொல்ல முடியாது. அதாவது, 'எனக்கு இவ்விதம் ஒரு சட்டம் இருக்கிறதென்று தெரியாது; ஆகையால் அதை மீறிவிட்டேன்' என்று சொல்லும் கட்சியை ஒரு நீதி ஸ்தலமும் கேட்காது. கேட்கவும் கூடாது. ஒவ்வொருவரும் சட்டங்களைத் தெரிந்துகொண்டிருப்பதாகவே பாவிக்கப்படும்.

இனி நமது சட்டங்களை யார் செய்வார்கள் என்று கவனிப்போம். இந்திய யூனியன் என்ற இந்திய ஐக்கியத்தில் 18 பெரிய ராஜ்யங்களும், 10 திட்டு ராஜ்யங்களும் உண்டு என்று சென்ற இதழில் சொன்னோம். மாகாணங்கள் என்று வழங்கப்பட்ட பிரதேசங்களுக்கும் குடியரசு அமைப்பில் 'ராஜ்யம்' (State) என்றுதான் பெயர். 'மதராஸ் ராஜ்யம்' என்பது ஏற்கனவே 'மதராஸ் மாகாணம்' என்று அழைக்கப்பட்ட பிரதேசம்தான். இனி இந்தியக்

குடியரசில் இருப்பவர்கள் எவருக்கும் இரண்டு சர்க்கார்கள் உண்டு; இரண்டு சட்ட மன்றம் உண்டு. அதாவது, ராஜ்ய சர்க்கார் ஒன்று; அதற்கு மேல் இந்திய யூனியன் சர்க்கார் ஒன்று. ராஜ்ய சட்ட சபை ஒன்று; இந்திய யூனியன் பார்லிமெண்ட் ஒன்று. தமிழ் நாட்டிலுள்ள நமக்குச் சில விஷயங்களில் இந்திய யூனியன் பார்லிமெண்டால் சட்டம் இயற்றப்படும். சில விஷயங்களில் சென்னை ராஜ்ய (மாகாண) சட்ட மன்றத்தால் சட்டங்கள் இயற்றப்படும்.

இந்தியக் குடியரசு அமைப்புச் சட்டப்படி அகில இந்தியாவிற்கும் சட்டம் இயற்ற அதிகாரம் உள்ளவர்கள்: (1) இந்திய யூனியன் பார்லிமெண்ட் (2) ஜனாதிபதி, ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் (மாகாணத்திற்கும்) சட்டம் செய்ய அதிகாரம் உள்ளவர்கள்: (1) ராஜ்ய சட்ட மன்றம் (2) கவர்னர்.

சட்டம் செய்யும் அதிகாரம் பிரிவினை செய்யப்பட்டிருக்கிறது: புதிய அரசியல் சட்டத்தின் 7-ஆவது அனுபந்தத்தில் 3 ஜாப்தாக்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அதாவது, இந்திய யூனியன் பார்லிமெண்ட் எந்த எந்த விஷயங்களில் சட்டம் செய்யலாமென்று யூனியன் ஜாப்தாவில் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விஷயங்களில் இந்திய யூனியன் பார்லிமெண்டும், சில நெருக்கடிகளில், ஜனாதிபதியும்தான் சட்டம் செய்யலாம். அந்த ஜாப்தாவில் கண்ட சங்கதிகளைப்பற்றி ஒரு ராஜ்ய (மாகாண) சட்டசபை சட்டம் செய்ய அதிகாரமில்லை. அப்படிச் செய்தால் அவை செல்லமாட்டா. அதுபோலவே ராஜ்ய (மாகாண) சட்ட சபைகள் எந்த எந்த விஷயங்களில் சட்டம் இயற்றலாமென்று ஒரு ஜாப்தா இருக்கின்றது. அவ்விஷயங்களில் சட்டம் செய்ய ராஜ்ய சட்டசபைகளுக்குத்தான் அதிகாரம். இந்த ஜாப்தாவில் கண்ட விஷயங்களைப்பற்றி இந்திய யூனியன் பார்லிமெண்ட் சட்டம் செய்தால் அது செல்லாது.

இந்த இரண்டு ஜாப்தாக்களைத் தவிர ஒரு மூன்றாவது ஜாப்தாவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் கண்ட விஷயங்களைப் பற்றி இந்திய யூனியன் பார்லிமெண்டும் சட்டம் செய்யலாம்; ராஜ்ய சட்ட சபைகளும் சட்டம் செய்யலாம். இருவர்களாலும் ஒரே விஷயத்தில் முரண்பாடாகச் சட்டங்கள் செய்யப்பட்டிருந்தால், இந்திய யூனியன் பார்லிமெண்டால் இயற்றப்படும் சட்டம் தான் செல்லும் என்று பொதுவாகச் சொல்லலாம். ஆனால் இந்த மூன்றாவது ஜாப்தாவில் கண்ட ஒரு விஷயத்தை பற்றி இந்திய யூனியன் பார்லிமெண்டால் ஒரு சட்டம் செய்யப்பட்டு பிறகு ஒரு ராஜ்ய சட்டசபை அதற்கு மாறாகச் சட்டம் செய்து அச்சட்டத்தை ஜனாதிபதி அங்கீகாரம் செய்து விட்டால் அந்த ராஜ்யத்தில் மட்டில் அதன் சட்டம் செல்லும். மேலும், தேசத்திற்கே ஆபத்து என்று ஜனாதிபதியால் பிரகடனம் செய்யப்பட்டால் அந்தச் சமயத்தில் எல்லா விஷயங்களிலும் இந்தியா பார்லிமெண்டுக்குச் சட்டம் செய்ய அதிகாரம் வந்துவிடும். தவிர இந்திய யூனியன் ராஜ்ய சபையில் மூன்றில் இரண்டு பங்குள்ள பெரும்பான்மை அங்கத்தினர்களின் அபிப்பிராயத்தின் பேரில் ராஜ்ய ஜாப்தாவில் கண்ட எந்த விஷயங்களிலும் இந்திய யூனியன் பார்லிமெண்டே சட்டம் செய்யலாமென்று தீர்மானிக்கலாம். சிறிய திட்டு ராஜ்யங்கள் (டில்லி, போபால், குடகு போன்றவை) சம்பந்தப்பட்ட வரையில் எல்லா விஷயங்களிலும் இந்திய யூனியன் பார்லிமெண்டுக்கே சட்டம் செய்ய உரிமை உண்டு.

இந்திய யூனியன் பார்லிமெண்டால் பிரத்தியேகமாகச் சட்டம் செய்யக்கூடிய விஷயங்கள் 97; ராஜ்ய (மாகாண) சட்ட சபைகளால் சட்டம் செய்யக்கூடிய விஷயங்கள் 66; இருவரும் சட்டம் செய்யக்கூடிய விஷயங்கள் 47. மேற்கண்ட விதம் தனித்தனி ஜாப்தாக்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஜாப்தாக்களில் காணப்படாமலிருக்கும் விஷயங்களைப்பற்றி இந்திய யூனியன் பார்லிமெண்ட்தான் சட்டம் செய்ய முடியும்.

இனி வழக்குகளில் ஒரு முக்கிய பிரச்னையை நமது நீதி மன்றங்கள் தீர்மா

னிக்க நேரிடலாம். அதாவது, ஒவ்வொரு சட்டமும் அதைச் செய்ய அதிகாரமுள்ள சட்டசபையால் ஏற்படுத்தப்பட்டதா என்று பரிசீலனை செய்ய நேரிடலாம். அதிகாரமில்லாமல் ஒரு சட்டசபையால் இயற்றப்பட்ட சட்டம் செல்லாதென்று நமது நீதி மன்றங்கள் சொல்லிவிடலாம். உதாரணமாக: தபால், தந்தி, ரயில்வே, யுத்தம், சமாதானம், சேனை, வருமானவரி, மரணவரி போன்ற விஷயங்களில் இந்திய யூனியன் பார்லிமெண்ட்தான் சட்டம் செய்யலாம். இவ்விஷயங்களில் சென்னை ராஜ்ய (மாகாண) சட்டசபை ஏதாவது சட்டம் செய்தால் செல்லாது. அது போலவே, விவசாயம், கல்வி, ஸ்தலஸ்தாபனங்கள், போலீஸ் போன்ற விஷயங்களில் ராஜ்ய சட்டசபைதான் சட்டம் செய்யலாம். அதற்கு மாருக இந்திய யூனியன் பார்லிமெண்டால் செய்யப்படும் சட்டம் செல்லாது. விவாகம், விவாகரத்து, சிவில் கிரிமினல் விவகார முறை, விலைக் கட்டுப்பாடு, தொழிற் சங்கங்கள் போன்ற பல விஷயங்களில் இருவருக்கும் சட்டம்செய்ய அதிகாரமுண்டு. ஒன்றுக்கொன்று முரண்பாடு இருந்தால் இந்திய யூனியன் பார்லிமெண்டால் செய்யப்பட்ட சட்டம்தான் செல்லுமென்று பொதுவாகச் சொல்லலாம்.

இந்திய யூனியன் பார்லிமெண்ட்: அகில இந்தியாவிற்கும் சட்டம் செய்யும் அதிகாரம், மேற்கண்டபடி, யூனியன் பார்லிமெண்டுக்குண்டென்று சொன்னேம். 'பார்லிமெண்ட்' என்பது ஆங்கில வார்த்தை. தமிழில் 'சட்ட மன்றம்' என்று சொல்லலாம். பார்லிமெண்டுக்கு 3 அங்கங்கள் உண்டு. அதாவது: (1) ஜனதிபதி (2) ராஜ்ய சபை (3) மக்கள் சபை. இவை மூன்றும் சேர்ந்து 'பார்லிமெண்ட்' எனப்படும். ஒரு சட்டம் இயற்றச் சாதாரணமாய் இந்த மூன்று அங்கங்களின் அங்கீகாரமும் வேண்டும். (சில விதி விலக்குகள் உண்டு. அவைகளைத் தனியாகக் கவனிப்போம்.) எந்தச் சட்டசபை அங்கத்தினரும் ஒரு புதுச் சட்டம் ஏற்படுத்த வேண்டுமென்று 'மசோதா' கொண்டு வரலாம். சர்க்காரும் அவசியமான விஷயங்களைப்பற்றி 'மசோதா' கொண்டு வருவார்கள். ஒரு சபையில் நிறைவேற்றப்பட்ட பிறகு மற்றொரு சபைக்கு அனுப்பப்படும். அங்கேயும் அப்படியே நிறைவேறினல் ஜனதிபதிக்கு அனுப்பப்படும். இவ்விதம் மக்கள் சபை, ராஜ்ய சபை, இரண்டாலும் நிறைவேற்றப்பட்ட மசோதாவை ஜனதிபதி அங்கீகரித்தவுடன் அதற்குச் 'சட்டம்' என்று பெயர். ஜனதிபதியின் அங்கீகாரமானவுடன் சர்க்கார் கெஜட்டில் விளம்பரப்படுத்தப்படும். இதுதான் சாதாரணமாய்ச் சட்டங்கள் ஏற்படும் முறை.

ஒரு சபையில் நிறைவேறிய மசோதாவை மற்றச் சபை அங்கீகரிக்காவிட்டாலும், இரண்டிலும் நிறைவேற்றப்பட்ட மசோதாவை ஜனதிபதி அங்கீகரிக்காவிட்டாலும் என்ன செய்வதென்பதைப்பற்றியும் அரசியல் அமைப்புச் சட்டத்தில் தெளிவாய் இருக்கின்றது. ஒரு சபையில் நிறைவேறிய மசோதாவை மற்றச் சபை நிராகரித்தாலும், அப்படியே ஏற்றுக்கொள்ள மறுத்தாலும், ஒன்றும் செய்யாமல் ஆறு மாதம் சும்மா இருந்தாலும், உடனே ஜனதிபதி இரண்டு சபைகளின் அங்கத்தினர்களையும் சேர்ந்து கூடும்படி செய்து அதில் பெரும்பான்மையோரின் அபிப்பிராயம் எப்படியோ, அப்படித் தீர்மானம் செய்விப்பார். அது இரண்டு சபைகளிலும் நிறைவேறியதாக வைத்துக் கொள்ளப்படும். மேலும், ஒரு மசோதா இரண்டு சபைகளாலும் நிறைவேற்றப்பட்டு ஜனதிபதியின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்ட பிறகு அவைகளை மறுபடியும் ஆலோசனை செய்யும்படியாவது, சில திருத்தங்கள் செய்யும்படியாவது அவர் அனுப்பலாம். அப்படி அனுப்பப்பட்ட பிறகு மறுபடியும் இரண்டு சபைகளாலும் எவ்விதம் நிறைவேற்றப்படுகிறதோ, அதை அப்படியே ஜனதிபதி அங்கீகாரம் செய்தாகவேண்டும்.

ஆனல் வரி, கடன் சம்பந்தமான மசோதாக்கள் மக்கள் சபையில் நிறைவேற்றப்பட்டால் போதும். அங்கே நிறைவேறிய பிறகு ராஜ்ய சபைக்கு அனுப்பப்படும். ராஜ்ய சபையில் தேவையான திருத்தங்கள் செய்யவேண்டுமென்று சிபார்சு செய்

யலாம். மறுபடியும் மக்கள் சபைக்கு வந்து அவர்கள் எப்படித் தீர்மானிக்கின்றனரோ அதுவேதான் ஜனாதிபதியின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்படும்.

சட்டம் செய்ய ஜனாதிபதியின் ஏகதேச அதிகாரம்: யூனியன் சட்ட சபைகள் கூடாமலிருக்கும்போது ஏதாவது நெருக்கடி ஏற்பட்டு, உடனே சட்டம் செய்ய வேண்டிய அவசியம் இருந்தால், ஜனாதிபதி மட்டில், 'ஆர்டினன்ஸ்' என்ற அவசரச் சட்டம் செய்யலாம். இதுவும் பார்லிமெண்டால் செய்யப்படும் சட்டங்களைப் போலவேதான். ஆனால் சட்ட சபைகள் கூடி ஆறு வாரங்கள் ஆனதும் இந்த அவசரச் சட்டங்கள் உயிர் இழந்துவிடும்; ரத்தாகும். அதற்குள்ளும் அவசரச் சட்டங்களை சட்ட சபைகள் ரத்துச் செய்யலாம். தேவையானால் அதே விதம் பார்லிமெண்டிலும் அதற்குள் சட்டம் இயற்றிக் கொள்ளலாம். எந்த எந்த விஷயங்களில் யூனியன் பார்லிமெண்ட் சட்டங்கள் இயற்ற முடியுமோ, அந்த விஷயங்களில் தான் ஜனாதிபதியும் அவசரச் சட்டங்கள் செய்யலாம்.

ராஜ்யங்களில் (மாகாணங்களில்) சட்டம் இயற்றுவது: ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் சட்டம் செய்ய அதிகாரமுள்ள சட்ட மன்றம் என்பது (1) கவர்னர். (2) சட்ட ஆலோசனைச் சபை (லெஜிஸ்லேடிவ் கவுன்சில்) அல்லது மேல் சட்ட சபை. (3) சட்டசபை (லெஜிஸ்லேடிவ் அஸெம்பிளி) அல்லது கீழ்ச் சட்ட சபை. இவைகள் அடங்கியது. சென்னை, பம்பாய், வங்காளம், பீஹார், ஐக்கிய மாகாணம், பஞ்சாப், மைசூர் இந்த ராஜ்யங்களில் மேற்கண்ட இரண்டு சட்ட சபைகளும் உண்டு. மற்ற ராஜ்யங்களில் மேல் சபை கிடையாது. இந்திய யூனியன் பார்லிமெண்டில் சட்டம் செய்வது போலவே தான் ராஜ்ய சட்ட சபைகளிலும் மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டு, பிறகு கவர்னரின் அங்கீகாரம் பெற்று சட்டங்களாகின்றன. ஆனால் கீழ்ச் சட்ட சபையில் நிறைவேற்றப்பட்டு மேல் சபை அப்படியே அங்கீகரிக்காமல் சில மாறுதல்களுடன் நிறைவேற்றினாலும், அல்லது நிறைவேற்றவே மறுத்தாலும் அல்லது மேல் சபை மூன்று மாதம் சும்மா இருந்தாலும், மறுபடியும் ஒரு முறை அம்மசோதா கீழ்ச் சட்ட சபையால் நிறைவேற்றப்பட்டால் போதும். இரண்டு சபைகளும் ஒப்புக்கொண்டது போலாகும். முக்கியமாகத் தோன்றும் மசோதாவைக் கவர்னர் தாமே அதை அங்கீகரிக்காமல் ஜனாதிபதியின் அங்கீகாரத்திற்கு அனுப்பலாம். ஜனாதிபதியின் அங்கீகாரம் பெற்றவுடன் அது சட்டமாகும்.

கவர்னரும் அவசரச் சட்டம் செய்யலாம்: சட்ட சபைகள் கூடாமலிருக்கும்போது, நெருக்கடியான சந்தர்ப்பங்களில் கவர்னர் ஏகதேசத்தில் 'ஆர்டினன்ஸ்' என்ற அவசரச் சட்டம் செய்யலாம். சட்ட சபை கூடி ஆறு வாரங்கள் ஆனதும் அவசரச் சட்டங்கள் ரத்தாகி விடும். அதற்குள்ளும் சட்டசபையே அவைகளை ரத்துசெய்யலாம். ஒரு ராஜ்ய சட்ட சபை எந்த எந்த விஷயங்களில் சட்டம் செய்யலாமோ, அவ்விஷயங்களில்தான் கவர்னர் அவசரச் சட்டம் செய்யலாம். மேலும் கவர்னர் அவசரச் சட்டம் செய்ய, சில விஷயங்களில் ஜனாதிபதியின் முன் அனுமதி பெற வேண்டும்.

இவ்விதம் நமக்குச் சட்டம் செய்பவர்கள் நம்முடைய பிரதிநிதிகளே: நமது நாடு குடியரசாயிற்றே; குடிகளுக்கும், சட்டம் செய்யும் பார்லிமெண்ட் அல்லது சட்ட சபைக்கும் என்ன சம்பந்தம்? நமக்கு நாமே சட்டம் செய்து கொண்டாலல்லவா குடி அரசாகும் என்று சந்தேகம் தோன்றலாம். இவ்விதம் ஒரு நாட்டின் பிரஜைகள் எல்லோரும் நேரடியாகக்கூடி, சட்டம் செய்து ராஜ்யம் நடத்துவது எங்கும் சாத்தியமில்லை. மிக மிகச் சிறிய ஒரு ஐரோப்பிய நாட்டில் இப்படி நடந்தது. அங்கே ஜனத் தொகை மிகக் குறைவு. ஒரே இடத்தில் கூடி விடலாம். நமது கிராமப் பஞ்சாயத்தைப் போலிருந்தால் அப்படிச் செய்யலாம். ஆனால் முப்பது கோடி மக்கள் கொண்ட, உலகத்தில் மிகப் பெரிய நாடுகளில் ஒன்றாகிய இந்தியாவில் குடியரசு நடத்துவது பிரதிநிதி முறையில் தான் சாத்தியம். இந்திய அரசியல் சட்டப்படி சட்டம் செய்ய அதிகாரம் உள்ள

மேலே சொல்லப்பட்ட உறுப்பினர்கள் எவ்விதம் நமது பிரதிநிதிகளாவார்கள் என்று கவனிப்போம்.

இந்திய யூனியன் 'மக்கள் சபை' சுமார் 500 அங்கத்தினர்கள் கொண்ட ஒரு சபை. இந்திய நாட்டிலுள்ள ஒவ்வொரு ஏழரை லக்ஷம் ஜனங்களுக்கும் ஒரு பிரதிநிதி விகிதம் பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். 21 வயது வந்த இந்தியப் பிரஜை, எவருக்கும் தேர்தலில் (ஓட்) வாக்குக் கொடுக்க உரிமை உண்டு. ஒவ்வொரு 'மக்கள் சபை'யும் 5 வருடங்களானால் கலைக்கப்பட்டு, மறுபடியும் தேர்தல் நடக்கும். புதுப்பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் சந்தர்ப்பம் ஜனங்களுக்கு 5 வருடங்களுக்கொரு முறை கட்டாயமாக உண்டு. ஆனால் இந்திய யூனியன் 'ராஜ்ய சபை' என்பது மக்களின் நேரடியான பிரதிநிதி சபை அன்று. தனித் தனி ராஜ்யங்களின் பிரதிநிதிகள் அடங்கிய சபை. இந்திய யூனியனைச் சேர்ந்த 28 ராஜ்யங்களுக்கும் இதில் பிரதிநிதிகள் இருப்பார்கள். இது 250 அங்கத்தினர்கள் கொண்ட சபை, இவர்களில் 12 பெயர்கள் மட்டில் ஜனாதிபதியால் விசேஷ யோக்கியதை உள்ளவர்களாக நியமிக்கப்படுவார்கள். பாக்கி 238 அங்கத்தினர்களும் ஒவ்வொரு ராஜ்யத்திலுமுள்ள கீழ்ச்சட்ட சபை அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் எவ்வளவு அங்கத்தினர்கள் என்று அரசியல் சட்டத்தில் காட்டப்பட்டிருக்கின்றது. சென்னையிலிருந்து இந்தச் சபைக்கு 27 அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். பம்பாய் 17, பீஹார் 21, அஸ்ஸாம் 6 இவ்விதம் ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் குறிக்கப் பெற்றிருக்கின்றது. ராஜ்ய சபை கலைக்கப்படமாட்டாது. நிரந்தரமானது. ஆனால் இரண்டு வருடங்களுக்கொரு முறை மூன்றில் ஒரு பங்கு அங்கத்தினர்கள் பதவி காலியாகும். அவர்களுடைய ஸ்தானத்தில் புது அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஜனாதிபதியை எல்லா ராஜ்யங்களிலுமுள்ள கீழ்ச் சட்ட சபை அங்கத்தினர்களும் இந்திய யூனியன் மக்கள் சபை, ராஜ்ய சபை அங்கத்தினர்களும் தேர்ந்தெடுப்பார்கள்.

ராஜ்யங்களிலுள்ள கீழ்ச்சட்ட சபை அங்கத்தினர்கள் நேரடியாக 21 வயது பூர்த்தியானவர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். சுமார் எழுபத்து ஐயாயிரம் பிரஜைகளுக்கு ஒரு பிரதிநிதி விகிதம் இருப்பார்கள். கீழ்ச் சபையில் எவ்வளவு அங்கத்தினர்களோ அதில் நாலில் ஒரு பங்கு எண்ணிக்கை உள்ளவர்கள் தான் மேல் சட்ட சபையின் மொத்த அங்கத்தினர்கள். இவர்களில் மூன்றில் ஒரு பங்கு அங்கத்தினர்கள் முனிசிபாலிடி, டிஸ்டிரிக்ட் போர்ட் முதலிய ஸ்தல ஸ்தாபனங்களாலும், மூன்றில் ஒரு பங்கு கீழ்ச்சட்ட சபையாலும், பன்னிரண்டில் ஒரு பங்கு சர்வகலாசாலையில் பட்டம் பெற்றவர்களாலும், பன்னிரண்டில் ஒரு பங்கு கல்வி ஸ்தாபனங்களைச் சேர்ந்த ஆசிரியர்களாலும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மற்றவர்கள் கவர்னரால் நியமிக்கப்படுவார்கள். கீழ்ச் சட்டசபை ஐந்து வருடங்களுக்கொருமுறை கலைக்கப்பட்டு, புது தேர்தல்கள் நடக்கும். மேல்சபை கலைக்கப்படமாட்டாது. ஆனால் இரண்டு வருடங்களுக்கொரு முறை மூன்றில் ஒரு பங்கு அங்கத்தினர்கள் போய், புது அங்கத்தினர்கள் வருவார்கள்

தேர்தல்களும் - தேர்தல் கமிஷனும்: மேற்கண்ட விதம் பொது மக்கள் தங்கள் பிரதிநிதிகளைப் பொறுக்கி எடுப்பது தேர்தல்கள் (எலெக்ஷன்) மூலம்தான். இதில் எந்தக் கட்சியும் தாற்காலிகமாகத் தாம் சர்க்கார் நடத்தும் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு, தேர்தல்களில் தலையிடாமலிருக்கும் பொருட்டு அரசியல் சட்டத்தில் ஒரு பெரிய பாதுகாப்பு ஏற்படுத்தி இருக்கின்றனர்.

அதாவது தேர்தல் அதிகார சபை (எலெக்ஷன் கமிஷன்) என்று ஒரு சக்தி வாய்ந்த ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் தலைவரை ஜனாதிபதி நியமிப்பார். ஆனால் அவரை அப்பதவியிலிருந்து நீக்க முடியாது. அப்படி நீக்க வேண்டுமானால் பார்லிமெண்டின் இரண்டு

சபைகளும் தனித் தனியாகக் கூடி மூன்றில் இரண்டு பங்குள்ள பெரும்பான்மை அங்கத்தினர்களால் தீர்மானம் நிறைவேற்றப் பட்டால்தான் முடியும். அதாவது இவர் நாட்டில் எவருக்கும் பயப்படாமலும், தயவு, தாட்சிண்யம் காட்டாமலும், தம்முடைய அதிகாரங்களைச் செலுத்தலாம். மற்ற அங்கத்தினர்களையும் ஜனாதிபதி நியமிப்பார். ஆனால் அவர்களையும் எலெக்ஷன் கமிஷன் தலைவருடைய அனுமதியின்றி நீக்க முடியாது. சட்ட சபைகளுக்கும் இந்திய யூனியன் மக்கள் சபை, ராஜ்ய சபை இவைகளுக்கும், ஜனாதிபதி பதவிக்கும், உப ஜனாதிபதி பதவிக்கும் நடக்கும் தேர்தல்களை இந்த எலெக்ஷன் கமிஷன் நடத்தும்.

இரண்டு சட்டசபைகள் ஏன்? இந்திய யூனியன் பார்லிமெண்டில் இரண்டு சட்ட சபைகள் உண்டென்று சொன்னோம். சென்னை ராஜ்யத்திலும், இன்னும் சில ராஜ்யங்களிலும்கூட இரண்டு சட்ட சபைகள் இருக்குமென்றும் சொல்லப்பட்டது. இப்படி இரண்டு சபைகள் எதற்காக என்று பார்ப்போம். இந்திய பார்லிமெண்டின் மக்கள் சபை அங்கத்தினர்கள் சர்வஜன வாக்கினால் (அதாவது, 21 வயது வந்த எல்லோரும் 'ஓட்' கொடுப்பதால்) தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மக்கள் சபை அங்கத்தினர்கள் 25 வயது பூர்த்தியானவர்களாக இருக்கவேண்டும். இவ்விதம் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் நிறைவேற்றும் சட்டங்களைக் கொஞ்சம் நிதானமாகப் பரிசீலனை செய்யவேண்டியது மிக அவசியமாகும். படபடப்பில் இவர்கள் யாதொரு காரியமும் செய்யாமல் பாதுகாப்பதற்காகவே ராஜ்யசபை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ராஜ்ய சபை அங்கத்தினர்கள் 30 வயதானவர்களாக இருக்கவேண்டும். மேலும், பொது மக்களால் நேரடியாகத்தேர்ந்தெடுக்கப் பட மாட்டார்கள். பொறுப்புவாய்ந்த ராஜ்ய சட்டசபை அங்கத்தினர்களால் வடிக்கட்டி எடுக்கப்பட்டவர்கள். விஞ்ஞானம், சமூக சேவை போன்ற விஷயங்களில் மேதாவிகளாக இருக்கும் 12 பெயர்களையும் இச்சபைக்கு அங்கத்தினர்களாக ஜனாதிபதி நியமிப்பார். இவ்விதம் யோக்கியதாம்சங்கள் கொண்ட ராஜ்ய சபையின் அங்கத்தினர்கள் மக்கள் சபையால் நிறைவேற்றப்படும் விஷயங்களைக் கவனித்துப் பரிசீலனை செய்யச் சந்தர்ப்பம் இருக்கின்றது. அதுபோலவே ராஜ்யங்களிலும் இருக்கும் மேல்சபைகள். ராஜ்யங்களின் கீழ்ச் சபை அங்கத்தினர் 25 வயது பூர்த்தியானவராக இருக்கவேண்டும். சர்வ ஜன வாக்கினால் தேர்ந்தெடுக்கப்படுவார். மேல் சபை அங்கத்தினர் 30 வயதானவராக இருப்பார். முன் சொன்னபடி பல ஸ்தாபனங்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்.

விதிகள் - உத்தரவுகள்: சட்ட சபைகளால் செய்யப்படும் சட்டங்களிலேயே ஒரு விஷயத்தைப் பற்றிப் பூர்ணமாயும் விவரமாயும் விதிகள் ஏற்படுத்துவதுதான் நல்லது. ஆனால், சில விஷயங்களில் இது சாத்தியமில்லை. ஆகையால் அச்சட்டத்திலேயே அதை அமுல் நடத்தத் தேவையான விதிகளைச் செய்ய வேறு ஸ்தாபனங்களுக்கும் தனி நபர்களுக்கும் அதிகாரம் கொடுக்கப் படுவதுண்டு. இவ்விதம் ஒரு சட்டத்தின் மூலம் அதிகாரம் பெற்றவர்களால் (இதற்காகச் சட்டத்தால் நிர்ணயிக்கப் பட்டிருக்கும் வரம்புக்குள்) செய்யும் விதிகளும் உத்தரவுகளும் சட்டமாகவே பாவிக்கப்படும்.

உதாரணமாக: ஷாப் சட்டம் சென்னை சட்ட சபையால் இயற்றப்பட்டது. ஒவ்வொரு கடையிலும் எந்த எந்த ரிஜிஸ்டர்கள் வைத்துக்கொள்ளப் பட வேண்டுமென்று ஷாப் சட்டத்தில் ஒன்றுமில்லை. ஆனால் எந்த ரிஜிஸ்டர்கள் வைத்துக் கொள்ள வேண்டுமென்று விதிகள் செய்ய மாகாண சர்க்காருக்குச் சட்டத்தில் அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதை அனுசரித்து, சர்க்கார் (மந்திரி சபை) விதிகள் செய்திருப்பதில் தான் இந்த ரிஜிஸ்டர்களின் விவரம் இருக்கிறது. இந்த விதியும் சட்டத்தைப் போலவேதான்.

இப்பொழுது அமுலில் இருக்கும் சட்டங்கள் எல்லாம் செல்லுமா? அரசியல் அமைப்புச் சட்டத்தின் 372 ஆம் ஷரத்தின்படி இந்தியா குடியரசாக மாறும் தினத்தன்று

187694
சென்னை 600 008

(26—1—1950-ல்) அமுலில் இருக்கும் எல்லாச் சட்டங்களும் (அரசியல் அமைப்புச் சட்டத்தின் மற்ற ஷரத்துக்களுக்கு விரோதமில்லாமல் இருந்தால்) செல்லும் என்று கண்டிருக்கின்றது. இனி இச்சட்டங்களைப் புதிதாக வரும் சட்ட சபைகள் மாற்றலாம். ஆனால் அந்தந்த விஷயங்கள் சம்பந்தப்பட்ட வரையில் சட்டம் செய்ய எந்த எந்தச் சட்ட சபைக்கு அதிகாரமிருக்கின்றதோ அதுதான் மாற்ற முடியும். மேலும் இப்பொழுது இருக்கும் சட்டங்களின் வாசகங்களை அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஷரத்துக்களுக்கு விரோதமில்லாதவாறு செய்ய எவ்விதம் மாற்றவேண்டுமோ அவ்விதம் மாற்றவும், திருத்தவும் ஜனதிபதிக்கு அதிகாரம் உண்டு. இந்த அதிகாரத்தை இரண்டு வருடம்வரை ஜனதிபதி செலுத்தலாம். மேலும், அரசியல் அமைப்புச் சட்டத்தின் 3-ஆவது பாகத்தில் மக்களின் ஜீவாதார உரிமைகள் என்ன என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த ஜீவாதார உரிமைகளைக் குறைக்கவோ, எடுக்கவும் எந்தச் சட்ட சபைக்கும் இனி உரிமையில்லை. மேலும், இப்பொழுது அனுஷ்டானத்திலிருக்கும் சட்டங்களிலும் இந்த ஜீவாதார உரிமைகளை மறுத்தோ, எடுத்தோ, குறைத்தோ எந்தச் சட்டங்கள் இருந்தாலும் அவை செல்லமாட்டாவென்று 13-ஆவது ஷரத்தில் வெளிப்படையாகக் காணப்பட்டிருக்கின்றது.

இந்த ஷரத்தின் விளைவு என்ன என்றும், இப்பொழுது அமுலில் இருக்கும் எந்தச் சட்டங்கள் இதன்படி செல்லாதென்றும் ஆராய்ச்சி செய்யவேண்டியது சட்ட நிபுணர்களின் கடமைகளில் ஒன்றாகும்.

அடுத்து வரும் இதழ்களில்:— ஜீவாதார உரிமைகள்; இந்தியப் பிரஜைகள்; நீதி மன்றங்கள்; சர்க்கார் ஏற்படுவதெப்படி? என்பவைபற்றி எழுதுவோம்.

புதுக்கோட்டை, பங்கனப்பள்ளி, சாந்தூர் சமஸ்தானங்களில் எல்லா சட்டங்களும் அமுலுக்குக் கொண்டுவர-சட்டம்

புதுக்கோட்டை, பங்கனப்பள்ளி, சாந்தூர் இந்த சமஸ்தானங்களின் நிர்வாகம் மட்டில் முதலில் மத்ய சர்க்காரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு மத்ய சர்க்காரின் பிரதிநிதியாகச் சென்னை சர்க்கார் இவ்விடங்களை நிர்வாகம் செய்து வந்தனர். அப்பொழுது ஆங்காங்கே ஏற்கனவே இருந்த சட்டங்களே அமுலில் இருந்தன. மத்ய சர்க்காரின் விசேஷ அதிகாரங்களை அனுசரித்து சில புதிய சட்டங்களும் ஏற்படுத்தப்பட்டன. ஆனால் இந்த சமஸ்தானங்கள், 1-8-1949 முதல் சென்னை மாகாணத்துடன் பூர்ணமாய் இணைக்கப்பட்டு இப்பொழுது இவைகள் இம்மாகாணத்தின் மற்ற இடங்களைப் போல் ஒரு பகுதியாகவே ஆகிவிட்டன. இந்த இடங்களுக்கு இனி சட்டம் செய்யும் அதிகாரம், இந்திய யூனியன் சட்ட சபைக்கும், சென்னை சட்ட சபைக்கும் வந்துவிட்டது. இந்த அதிகாரத்தை அனுசரித்து இந்திய யூனியன் பார்லிமெண்டால் (மாகாணங்களுடன் இணைக்கப்பட்ட எல்லா சமஸ்தானங்களிலும் அமுலில் இருக்கும்படி) இரண்டு சட்டங்களும், சென்னை சட்ட சபையால் புதுக்கோட்டை, பங்கனப்பள்ளி, சாந்தூர் இவ்விடங்களுக்கு ஒரு சட்டமும் இயற்றப் பட்டிருக்கின்றன. அவை விவரம்:—

(1) 1949-ம் வருடத்திய 59-வது மத்திய சட்டம் (17—1—1950 தேதி சென்னை சர்க்கார் கெஜட் பாகம் III B பக்கம் 199) இச்சட்டத்தின் மூலம் 253 மத்திய சட்டங்களும் 7 அவசரச் சட்டங்களும் 1 ரெகுலேஷனும் 1—1—1950 முதல் புதுக்கோட்டை முதலிய எல்லா இணைக்கப்பட்ட சமஸ்தானங்களிலும் அமுலுக்கு வரும்.

(2) 1949-ம் வருடத்திய 67-வது மத்திய சட்டம். (17—1—1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் III B பக்கம் 229) இச்சட்டத்தால் மேற்கண்ட இடங்களுக்கு இந்திய வருமான வரிச் சட்டம் (இன்கம் டாக்ஸ் ஆக்ட்); தொழில் லாபவரிச்சட்டம்; வருமானவரி விசாரணைக் கமிஷன் சட்டம் முதலிய மத்திய வரிச் சட்டங்கள் 1—8—1949 முதல் அமுலுக்கு வரும்.

(3) 1949-ம் வருடத்திய 35-வது சென்னைச் சட்டம் (30—12—1949 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் IV B பக்கம் 293) இச்சட்டத்தின் மூலம் சென்னை மாகாணத்தில் அமுலிலுள்ள 67 மத்திய சட்டங்களும், 92 சென்னைச் சட்டங்களும், புதுக்கோட்டை, பங்கனப்பள்ளி, சாந்தூர் இந்த சமஸ்தானங்களுக்கு 1—1—1950 முதல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

இச்சட்டங்கள் அமுலுக்கு வந்த தேதியில் இச்சட்டங்களில் உள்ள அதே விஷயங்களைப்பற்றி ஏற்கனவே அந்த சமஸ்தானங்களில் அமுலில் இருந்த சட்டங்கள் ரத்தானவையாகும். ஆனால் ஏற்கனவே உள்ள சட்டங்களின்படி அதற்கு முன் நடந்த விஷயங்கள் பாதிக்கப்படமாட்டா. ஏற்கனவே உள்ள சட்டத்திற்கு விரோதமாய் நடந்ததற்காக விதிக்கக்கூடிய தண்டனை அபராதம், பறிமுதல் இவைகளும் இப்புது சட்டங்களின் விஸ்தரிப்பால் பாதிக்கப்படமாட்டா. அவை பற்றி நடக்கும் விசாரணைகளும் நடவடிக்கைகளும் நடக்கும். பழைய சட்டங்களின்படி கொடுக்கப்பட்ட பர்மிட்டுகள், லைசென்சுகள், ரிஜிஸ்ட்ரேஷன், முதலியவைகளும் அவற்றின்படி ஏற்படுத்தப்பட்ட விதிகளும் உத்தரவுகளும் அவ்விஷயங்களைப்பற்றி உள்ள புதிய சட்டங்களின் கீழ், கொடுக்கப்பட்டதாகவும், ஏற்படுத்தப்பட்டதாகவும் கருதப்படும்.

(குறிப்பு: எல்லாச் சட்டங்களின் பெயரும் வருடமும் கொண்ட ஜாப்தாக்கள் பெரிதாக இருப்பதால் இங்கே குறிப்பிடவில்லை. அவசியமானால் பின்பு கொடுப்போம்.)

தொழிற் தகராறு சட்டம் (பாங்கு, இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் சம்பந்தமாய்) திருத்தப்பட்டிருக்கிறது

1947 ஆம் வருடத்திய தொழிற் தகராறு சட்டம் (Industrial Disputes Act) என்பது ஒரு தொழிற்சாலை அல்லது ஒரு ஸ்தாபனத்தின் நிர்வாகஸ்தர்களுக்கும் அதில் வேலை செய்யும் தொழிலாளர்கள் அல்லது சிப்பந்திகளுக்குமிடையே அவர்களுடைய வேலை, சம்பளம், விடுமுறை போன்ற பல விஷயங்களில் தகராறுகள் அல்லது சச்சரவுகள் ஏற்பட்டால் அவைகளை சமாதானம் செய்யவும் தீர்த்து வைக்கவும் மத்தியஸ்தர்கள் நியமிக்க மாகாண சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கும் ஒரு சட்டம் பல மாகாணங்களில் கிளை காரியாலயங்கள் வைத்துத் தொழில் நடத்தும் பாங்குகள் (இம்பீரியல் பாங்கு உள்பட), இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் இவைகளில் ஏதாவது தகராறு வந்தால் இதுவரை அந்தந்த மாகாண சர்க்காரே பொறுப்பேற்றுக் கொண்டு மத்தியஸ்தர் நியமித்து வந்தன. இப்படிச் செய்வதில் ஒரு இடைஞ்சல் இருந்தது. உதாரணமாக பல மாகாணங்களில் கிளை உள்ள ஒரு பாங்கில் பல மாகாணங்களிலும் தொழிற் தகராறுகள் ஏற்பட்டால் ஒவ்வொரு மாகாண சர்க்காரும் அதை வெவ்வேறு வகையாகத் தீர்த்து வைக்கலாம். இதனால் கெடுதி விளையக்கூடுமென்று இப்பொழுது சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. இனி பல மாகாணங்களில் கிளை ஆபீசுகளுடன் வேலை செய்யும் பாங்கிகளும் இன்ஷ்யூரன்சு கம்பெனிகளிலும் எந்த மாகாணத்தில் இருக்கும் ஆபீசில் தொழில் தகராறு ஏற்பட்டாலும் அதை சட்டப்படி பொறுப்பேற்றுக்கொண்டு தீர்த்து வைக்க வேண்டியது மத்திய சர்க்கார்தான். மாகாண சர்க்கார்களுக்கு இனி இவை சம்பந்தமான சச்சரவுகளில் பொறுப்பில்லை. மாகாண சர்க்காருக்கு இவை சம்பந்தமாய் இனி யாதொரு அதிகாரமும் கிடையாது. இது சம்பந்தமாய் ஒரு அவசரச் சட்டம் ஏற்பட்டு இப்பொழுது அதே விஷயம் இந்திய யூனியன் பார்லிமெண்டால் சட்டமாக இயற்றப்பட்டிருக்கிறது.

இத்திருத்தச் சட்டம் 1949 ஆம் வருடத்திய 54-வது மத்திய சட்டம்.

(27-12-1949 சென்னை சர்க்கார் கெஜட்-பாகம் III B பக்கம் - 429)

[இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட்டிலும் பல மாகாணங்களிலுள்ள ஹைகோர்ட்டுகளிலும் சமீபத்தில் நடந்த வழக்குகளில் உயர் நீதிபதிகளால் அளிக்கப்பட்ட சில தீர்ப்புக்களின் முக்கிய அம்சங்களை நமது நேயர்கள் வாசிக்கலாம். அடிப்படையான சட்ட தத்துவங்களை விளக்கும் இங்கிலாந்திலுள்ள நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் இங்கே காணலாம். தொழிற்சாலைகள் சட்டம், ஷாப் சட்டம் இவைகளின்படி முடிவான தீர்ப்பளிக்க அதிகாரம் பெற்ற அதிகாரிகளின் தீர்ப்புகளும் சேர்க்கப்படும்.]

சட்ட விரோதமாய்ப் போலீஸ்காரர் அரெஸ்டு செய்தால் தப்பித்துக்கொள்ள உரிமை உண்டா?

கோர்ட்: சென்னை ஹைகோர்ட்

நீதிபதி: நீதிபதி பஞ்சாபகேசய்யர் அவர்கள்

ஆதாரம்: 1950-1 மதராஸ் லாஜர்னல் பக்கம் 27

இரவு சுமார் 7 மணிக்கு நடுத்தெருவில் நான்கு பெயர்கள் ஒருவருக்கொருவர் சண்டை செய்து கொண்டும் ஒருவரை ஒருவர் (கெட்ட வார்த்தை) துர்ப்பாஷையால் திட்டிக் கொண்டும் இருந்தனர். கும்முடிப்பூண்டி போலீஸ் ஸ்டேஷனைச் சேர்ந்த இரண்டு கான்ஸ்டெபிள்களும் ஒரு ஹெட் கான்ஸ்டெபிளும் அங்கே வந்து தங்கள் எல்லைக்குள் நடந்து கொண்டிருந்த அக்கலகத்தை நிறுத்த முயன்றனர். சண்டை செய்பவர்களை எச்சரித்தனர். சண்டையிட்டுக் கொண்டிருந்தவர்கள் போலீஸ்காரர்கள் சொல்வதைக் கேட்காமலே சண்டையை வளர்த்திக் கொண்டே போயினர். உடனே அவர்களைப் போலீசார் அரெஸ்டு செய்தனர். பிடிபட்டவர்கள் எல்லோரும் போலீஸ்காரர்களுக்குக் கொஞ்சம் காயம் ஏற்படுத்தி, திமிறிக்கொண்டு ஓடி விட்டனர். அத்துடன் அவர்கள் நிற்கவில்லை. தப்பித்துக்கொண்டு போன பிறகும்கூடப் போலீஸ் கான்ஸ்டெபிள்களைக் கற்களால் அடித்தனர். கான்ஸ்டெபிள்களின் பிடியிலிருந்து இவர்கள் தப்பிக் கொள்ளும் போது கான்ஸ்டெபிள்களுக்குக் கொஞ்சம் காயம் ஏற்பட்டது. தப்பிப்போன பிறகு மறுபடியும் கற்களால் அடித்ததாலும் கான்ஸ்டெபிள்களுக்கு அதிக காயம் ஏற்பட்டது.

இவ்விதம் போலீஸ் கான்ஸ்டெபிள்களுக்குக் காயம் ஏற்படுத்தியவர்கள் மீது சர்க்கார் கிரிமினல் வழக்குத் தொடர்ந்தனர். திருவள்ளூர் சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் எதிரிகளை விட்டு விட்டார். சர்க்காரால் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்யப்பட்டது.

இவ்வழக்கில் ஹைகோர்ட் நீதிபதி பஞ்சாபகேசய்யர் அவர்களின் தீர்ப்பு இது சம்பந்தமான சில சட்ட பிரச்னைகளை மிகத் தெளிவுபடுத்துகின்றது. குற்றங்கள் இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. சில பெரிய குற்றங்கள் நடந்தால் சந்தேகப்பட்ட குற்றவாளிகளைப் போலீசார் தாங்களே பிடிக்கலாம். (அரஸ்டு செய்யலாம்.) இதற்கு ஆங்கிலத்தில் காக்னிஸபில் அபென்ஸ் 'Cognisable Offence' என்று சொல்வது. சில குற்றங்கள் சம்பந்தப்பட்ட வரையில், மாஜிஸ்ட்ரேட்டின் உத்தரவு (வாரண்ட்) இருந்தாலொழியக் குற்றவாளிகளாகக் கருதப்படுபவர்களைப் போலீசார் பிடிக்க (அரஸ்டு செய்ய) முடியாது. இக்குற்றங்களுக்கு ஆங்கிலத்தில்

நான் காக்னிஸபில் அபென்ஸ் 'Non Cognisable Offences' என்று சொல்வது. பிரஸ்தாப வழக்கில் ஏற்பட்ட சண்டைக்காகப் போலீசார் தாங்களே, அதாவது மாஜிஸ்ட்ரேட்டின் வாரண்டில்லாமல், ஒருவரையும் பிடிக்க (அரஸ்டு செய்ய) முடியாது. அப்படி அரஸ்டு செய்வது சட்ட விரோதமாகும். (ஆனால் போலீசாரின் பார்வையிலேயே இவ்விதக் குற்றங்களைச் செய்பவரின் பெயர் விலாசம் இவைகளைப் போலீசார் கேட்கலாம். குற்றம் செய்பவர் தம் பெயரையும் விலாசத்தையும் கொடுக்க மறுத்தாலும், அல்லது பொய்யாகக் கொடுக்கிறார் என்று போலீஸ்காரருக்குச் சந்தேகம் ஏற்பட்டாலும் அவ்விதம் அவருடைய உண்மைப் பெயரையும் விலாசத்தையும் தெரிந்து கொள்ளும் பொருட்டு அவரை அரஸ்டு செய்யப் போலீசாருக்கு அதிகாரமுண்டு. பிரஸ்தாப வழக்கில் இந்தப் பிரச்னை ஏற்படவில்லை.) சட்ட விரோதமாய்ப் போலீசாரோ மற்ற அதிகாரியோ, ஒருவரைப் பிடித்தால், அதாவது அரஸ்டு செய்தால், பிடிபட்டவர் தம்மை மீட்டுக் கொள்வதற்கு எவ்வளவு பலாதகாரம் உபயோகப்படுத்த வேண்டுமோ அதை மட்டில் உபயோகித்துத் தம்மை மீட்டுக் கொள்ளலாம். அப்படி மீட்டுக் கொள்வதற்காகத் தம்மைப் பிடித்தவர் எவராக இருந்தாலும், கான்ஸ்டெபிளாக இருந்தாலும் வேறு அதிகாரியாக இருந்தாலும், அவரைக் காயப்படுத்துவதற்குக்கூடப் பாத்தியம் உண்டு. அப்படித் தப்பித்துக் கொள்வதில் அரஸ்டு செய்தவருக்குக் காயப்படுத்துவது குற்றமாகாது. ஏனென்றால் முதலில் அவர் பிடித்தது (அரஸ்டு செய்தது) சட்ட விரோதம். ஆனால் இவ்விதமான சட்ட விரோதமான பிடிப்பிலிருந்து விடுவித்துக் கொண்ட பிறகு பழி வாங்கும் எண்ணத்துடன் தம்மைப் பிடித்தவர்களை மறுபடியும் அடிப்பதும் அவர்களைத் துன்புறுத்துவதும் குற்றமாகும் என்று நீதிபதி அவர்கள் விளக்கி இருக்கின்றனர்.

இவ்வழக்கில் எதிரிகள் போலீசாரின் (சட்ட விரோதமான) அரஸ்டிலிருந்து தப்பியதும் அதற்காகக் கொஞ்சம் காயம் ஏற்படுத்தியதும் குற்றமில்லை என்றும், ஆனால் போலீசார் உடுப்பிலிருந்தாலும் இல்லா விட்டாலும் பொது ஸ்தலங்களில் அமைதிக்குறைவு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளக்கடமைப்பட்டவர்களாதலால் அவ்விதம் அவர்கள் தங்கள் கடமையைச் செய்து கொண்டிருக்கும்போது அவர்களைத் தப்பி ஓடியவர்கள் தப்புவித்துக்கொண்ட பிறகு துன்புறுத்தியது பீனல் கோடு 353-ஆவது செக்ஷன்படி குற்றமாகுமென்றும் அபிப்பிராயப்பட்டு, எதிரிகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

ஒரு விவசாயி வாங்கும் கடன் தொகை புதுப்பிக்கப்படாமல், துண்டிக்கப் பட்டால் 'அசல்' எது?

கோர்ட்: சென்னை ஹைகோர்ட்

நீதிபதிகள்: நீதிபதி ஹார்வில் அவர்களும் நீதிபதி பாலகிருஷ்ணய்யர் அவர்களும்

ஆதாரம்: *1949—2* மதராஸ் லாஜர்னல் பக்கம் *768*

விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டப்படி 1—10—1932-க்கு முன் ஒரு விவசாயி கடன் வாங்கி இருந்தால் அக்கடன் தொகைக்கு 1—10—1937 வரை உள்ள வட்டி ரத்தாகி விடும். அசல் தொகையையும் 1—10—1937 முதல் $6\frac{1}{4}\%$ வட்டியையும் தான் கொடுக்க வேண்டும். மேலும் அசலைப்போல் இரட்டிப்புத் தொகை கொடுக்கப்பட்டிருந்தால் ஜாடா அசல் வட்டியும் ரத்தாகி விடும். 'அசல்' தொகை என்பது ஆதியில் கடனாக வாங்கிய தொகை என்று அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. அசலையும் வட்டியையும் சேர்த்துச் சேர்த்து எவ்வளவு தடவைகள் புதுப் புது தஸ்தாவேஜிகள் எழுதிக் கொடுக்கப்பட்டிருந்தாலும், ஆதியில் கொடுக்கப்பட்ட கடன்தான் அசல் தொகை எனப்படும். இவ்விதம் ஒரு கடன் சம்பந்தமாய்ப் புதுப்பிக்கப்படும் தஸ்தாவேஜிகள் அதே கடன்காரர் பெயருக்கு இருந்தாலும் வேறு ஒருவர் பெயருக்கு இருந்தாலும் அதே கடனாளியால் எழுதிக் கொடுக்கப்பட்டிருந்தாலும் வேறு ஒருவரால் புதுப்பிக்கப்பட்டிருந்தாலும் பாதக

மில்லை. ஆதியில் அக்கடனுக்காகக் கொடுக்கப்பட்ட தொகைதான் 'அசல்' என்று பாவிக்கப்படும். இவ்விதம்தான் கணக்குச் செய்ய வேண்டுமென்று 1948-ல் ஒரு திருத்தச் சட்ட மூலம் விளக்கம் செய்யப்பட்டது.

ஒரே கடன் புதுப்பிக்கப்பட்டிருந்தால் தான் இவ்விதம் கணக்குச் செய்து அசலைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றும், ஆனால் ஒரு கடன் துண்டிக்கப்பட்டிருந்தால் இவ்விதம் கணக்குச்செய்ய வேண்டியதில்லை என்றும் இந்த வழக்கில் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர். துண்டிக்கப்பட்ட கடன்களுக்கு 'அசல்' துண்டிக்கப்பட்ட தேதியில் ஒப்புக்கொள்ளப்பட்ட அசல் தொகைதான் என்று தீர்ப்பளித்தனர்.

இந்த வழக்கில் 10—5—1925-ல் மூன்று பெயர்கள் சேர்ந்து கடன் வாங்கினார்கள். அசலும் வட்டியும் சேர்த்துச் சேர்த்து இரண்டு தடவை புதுப்பித்துக் கொடுத்தனர். 12—3—1931-ல் அசல் வட்டி எல்லாம் சேர்ந்து ரூ. 19400 ஆயிற்று. 12—3—1931-ல் இத்தொகையை இரண்டு பங்காகப் பிரித்து ஒரு பாதிக்கு அதாவது ரூ. 9700-க்கு ஒரு கடனாளிமட்டில் பிரத்யேகமாய் ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்தார். மற்ற இரண்டு கடனாளிகளும் மற்றொரு பாதி ரூ. 9700-க்கு ஒரு தனிப் பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்தனர். இந்த இரண்டு பெயர்கள் சேர்ந்து எழுதிக் கொடுத்த பிராமிசரி நோட்டின் பேரில் வழக்கு ஏற்பட்டது. கடன் தொகைக்கு 'அசல்' 1925 வாங்கப்பட்ட தொகை தான் என்றும் கடன் வாங்கியவர்கள் கக்ஷி சொன்னார்கள். நீதிபதிகள் இதை ஏற்றுக் கொள்ளவில்லை. இக்கடன் அடிக்கடி வெவ்வேறு ஆசாமிகளால் புதுப்பிக்கப்பட்டிருந்தால்தான் அப்படிச் செய்யலாம். இங்கே கடன் இரண்டாக துண்டிக்கப்பட்டுவிட்டதால் அவ்விதம் துண்டிக்கப்பட்ட தேதியாகிய 12—3—1931-ல் ஏற்பட்ட கடன் ஒரு புதுக் கடன். பழைய கடனல்ல. அன்று ஏற்பட்ட கடனின் தொகைதான் அசல் தொகை என்றும், இவர்கள் வாங்கிய கடனுக்கு அசல் ரூ. 9700 என்றும் கணக்குச் செய்யப்பட்டது. (அதுபோலவே கடன் கொடுத்தவர்கள் குடும்பத்தில் பாக மேற்பட்டு கடன் தொகையும் பாகம் செய்யப்பட்டு, அதாவது துண்டிக்கப்பட்டு, அதே கடனாளி ஒவ்வொரு துண்டுக்கும் தனித் தனி ஆசாமிகளுக்குத் தனித் தனி பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்தாலும் 'அசல்' என்பது கடன் தொகை துண்டிக்கப்பட்ட தேதியில் இருப்பதுதான்).

ஒருவருடைய மரங்களின் பழங்கள் பக்கத்திலுள்ள வேறு ஒருவருடைய நிலத்தில் விழுந்தால் அவைகளைப் பொறுக்க முடியுமா?

கோர்ட் : சென்னை ஹைகோர்ட்

நீதிபதி : நீதிபதி விசுவநாத சாஸ்திரி அவர்கள்

ஆதாரம் : 62 லா வீக்லி-ஜர்னல் பகுதி பக்கம் 191

பல இடங்களில் சாதாரணமாய்த்தினசரி நடந்து வரும் ஒரு சிறிய சம்பவம் இவ் வழக்கில் ஒரு சட்டப் பிரச்னையாக மாறியது. ஒருவருடைய நிலத்தில் சில புளிய மரங்கள் இருந்தன. அம்மரங்களின் கிளைகள் பக்கத்திலுள்ள வேறு ஒருவருடைய நிலத்திற்கு நேர் மேலாகப் படர்ந்து பக்கத்து நிலத்தில் அம்மரங்களிலிருந்து புளியம் பழங்கள் உதிர்ந்தன. மரங்களின் சொந்தக்காரர் பக்கத்து நிலத்திற்குப்போய் தம்மரங்களிலிருந்து விழுந்த புளியம்பழங்களைப் பொறுக்கப் போனார். பக்கத்து நிலத்தின் சொந்தக்காரர் அதைத் தடுத்தார். அவர் தடுப்பது சரியா, தவறா என்று வழக்கு ஏற்பட்டது. மரங்களின் சொந்தக்காரர் (தம் பழங்களைப் பொறுக்கக் கூட) பக்கத்து நிலத்தில் பிரவேசிக்கச் சட்டப்படி பாத்தியமில்லை என்று நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர்.

ஒரு நிலத்தின் சொந்தக்காரர் வேறு ஒருவருடைய நிலத்தில் பிரவேசிக்க இரண்டு வகைகளில்தான் பாத்தியம் ஏற்படலாம். அதாவது இவ்விதம் செய்ய இருவர்களும் சம்மதித்து ஒரு ஒப்பந்தம் அல்லது ஏற்பாடு செய்து கொள்ளலாம். அல்லது ஆங்கிலத்தில் 'ஈஸ்மெண்ட்'

என்று சொல்லப்படும் பாத்தியம் இருக்க வேண்டும். அதாவது ஒருவருடைய சொத்தில் மற்றொருவருக்குச் சௌகரிய நிமித்தம் உண்டாகும் ஒரு பாத்தியத்தை. உதாரணமாக: ஒரு நிலத்தின் சொந்தக்காரர் தம் நிலத்திற்குப்போக வேறு ஒருவருடைய நிலத்தின் வழியாகவே தொடர்ந்தாற்போல் 20 வருடங்களுக்குக் குறையாமல் போய்க்கொண்டிருந்தால் அவ்விதம் செய்ய ஒரு பாத்தியம் சட்டப்படி உண்டாகும். இதற்குத்தான் 'ஈஸ்மெண்ட்' என்று சொல்வது.

இந்த இரண்டு வகையான பாத்தியங்களில் ஒன்றுமில்லாவிட்டால் ஒரு நிலத்தின் சொந்தக்காரர் பக்கத்து நிலத்தில் பிரவேசிக்கச் சட்டம் இடங்கொடுக்காது.

பாகிஸ்தான் வழக்கு: சப் ஜட்ஜையும், வக்கீலையும், அவமதிப்பாகப் பேசிய மாஜிஸ்ட்ரேட் தண்டிக்கப்பட்டார்.

கோர்ட்: லாகூர் ஹைகோர்ட்.

நீதிபதிகள்: பிரதமநீதிபதி அப்துல்ரஷித்;
நீதிபதி முனிர்;
நீதிபதி முகமது ஷரீப்.

ஆதாரம்: 1949 ஆல் இந்தியா ரிப்போர்டர், லாகூர், 270.

இப்பொழுது பாகிஸ்தானைச் சேர்ந்த லாகூரில் ஒரு சினிமாக் கொட்டகையைப் பொறுத்து இரண்டு பெயர்கள் சண்டை போட்டுக்கொண்டனர். அந்நகர் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் காதர் பக்ஷ் என்பவர் மாஜிஸ்ட்ரேட் என்ற முறைமையில் அந்தச் சினிமாக் கொட்டகையை ஜப்தி செய்து, சண்டையிடும் இரு தரப்பினரையும் தமது கோர்ட்டுக்குமுன் ஆஜராகும்படி தேதி குறிப்பிட்டு உத்தரவிட்டிருந்தார்.

அந்த விசாரணை தினத்திற்கு முன்தினம் சண்டை செய்பவர்களில் ஒருவர் லாகூர் சப் கோர்ட்டில் அந்தச் சினிமாக்கொட்டகையைப்பற்றி ஒரு சிவில் வழக்குத் தொடங்கி அதில் மனுப்போட்டு, எதிர் கக்ஷிக்காரரை மாஜிஸ்ட்ரேட் முன் இது சம்பந்தமாய் வழக்கு நடத்தக்கூடாதென்றும் 'இஞ்சங்ஷன்' என்ற தடை உத்தரவு வாங்கினர்.

இந்த நிலைமையில் மாஜிஸ்ட்ரேட் காதர் பக்ஷின் கோர்ட்டில் விசாரணை தினம் வந்தது. வழக்கைக் கூப்பிட்டவுடன் வக்கீல் எழுந்திருந்து தம்முடைய கக்ஷிக்காரர் அதே சினிமாக் கொட்டகை சம்பந்தமாய் சப் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்திருக்கும் சங்கதியையும், சப் ஜட்ஜ் தடை உத்தரவு பிறப்பித்திருக்கும் விஷயத்தையும் மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தெரிவித்தார். எதிர் கக்ஷி வக்கீலும் அதை ஒப்புக்கொண்டார். இனி கவனிக்கவும்.

இதைக் கேட்ட மாஜிஸ்ட்ரேட் காதர் பக்ஷுக்கு அடக்கமுடியாத கோபம் வந்துவிட்டது. நாற்காலியைவிட்டு எழுந்து நின்றுகொண்டு வக்கீலைப் பார்த்து: "இது என்ன ஐயா, ஒரு பைத்தியக்காரத் தடை உத்தரவு? ஒரு அசட்டு வக்கீலின் மனுவின் பேரில் ஒரு அசட்டு சப்ஜட்ஜ் செய்த உத்தரவாக இருக்கிறதே! நான் இதைச் சட்டைசெய்யப்போவதில்லை. நீர் எங்கிருந்தய்யா வருகின்றீர்? நீர் எத்தனை வருடம் வக்கீலாக இருக்கின்றீர்? உமக்குச் சட்டம் தெரியாதுபோலிருக்கின்றதே. இவ்விதம் பித்துக்கொள்ளித்தனமான உத்தரவைப் போடும்படி செய்த உமது குற்றத்திற்கு உம்மை உள்ளே தள்ளலாமே" என்று சரமாரியாக அடுக்கிவிட்டு ஓய்ந்தார்.

இவ்விதம் இந்த மாஜிஸ்ட்ரேட் தாம் கோர்ட் நடத்தும்போது வேறு கோர்ட்டை, அதாவது, லாகூர் சப் கோர்ட்டை அவமதித்ததற்காக அவர்மீது லாகூர் ஹைகோர்ட்டில் சம்பந்தப்பட்ட வக்கீல் மனுக்கொடுத்தார்.

இவ்வழக்கை விசாரித்த லாகூர் ஹைகோர்ட் நீதிபதிகள் இது சம்பந்தமான சட்டத்தை மிகத் தெளிவாக விளக்கி இருக்கின்றனர். நீதிஸ்தலங்களையும், நீதிபதிகளையும் அவதூறாகப் பேசுவதும், எழுதுவதும் அவ

கேள்வியும் – பதிலும்

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே.

கேள்வி : (L 2302 ஹபீப், ஈரோடு) சர்க்காரால் ஒருவர் நாடு கடத்தப்படுதல் என்பது எத்தகைய குற்றத்திற்கு ? எந்தச் சட்டத்தின் கீழ் ?

பதில் : நமது நாட்டின் பிரஜையாக இருப்பவர் எந்தக் குற்றம் செய்தாலும் அதற்கான தண்டனையை இந்நாட்டிலேயே அடைவார். நாடு கடத்தப்படமாட்டார். அன்னிய நாட்டின் பிரஜைகளை இந்நாட்டை விட்டு வெளியே அகற்ற சர்க்காருக்கு அதிகாரமளிக்கும் சட்டங்கள் இருக்கின்றன. யாதொரு குற்றமும் செய்யாத அன்னியரைக்கூட நாட்டை விட்டு அகற்றலாம்.

கேள்வி : (L 2305 ராஜகோபால செட்டி, பறங்கிப்பேட்டை) மனை, வீடு, இவைகளை முனிசிபாலிடி அல்லது யூனியன் எல்லைக்குள் போக்கியம் பிடித்தால் தொகைக் குறைவு ஏற்படுமா ?

பதில் : முனிசிபல் எல்லைக்குள்ளும், 26—8—1930-க்கு முன் யூனியனாக இருந்து இப்போது பஞ்சாயத்தாக இருக்கும் இடங்களிலும் உள்ள வீடு (அதைச்

(முன் பக்கத் தொடர்ச்சி)

மதிப்பதும், நீதி செலுத்துவதை யார் தடை செய்வதும் ஆங்கிலத்தில் 'Contempt of Court' என்று வழங்கும் நீதிஸ்தலத்தை அவமதித்த குற்றமாகும். இப்படிச் செய்வது பொது மக்கள் மனதில் நியாயம் வழங்கப்படும் முறையைப்பற்றியே சந்தேகத்தையும் அதிருப்தியையும் உண்டாக்கக்கூடியது. இதை வளர விடுவது அபாயம் விளைவிக்கக்கூடியது. வழக்குகளை விசாரிக்கும் நீதிபதிகள் கூட அவர்கள் முன் விசாரிக்கப்படும் சாக்ஷிகளையும், வழக்கு நடத்தும் வக்கீல்களையும் பயமுறுத்துவதும் நியாயம் வழங்குவதைத் தடை செய்வதுபோல்தான் ஆகும் என்று நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர்.

ஒரு கோர்ட்டை நடத்தும் நீதிபதி கூட வேறு கோர்ட்டையோ ஜட்ஜையோ அவமதித்துப் பேசினால் அதுவும் குற்றமாகுமென்றும் நீதிபதிகள் விளக்கி இருக்கின்றனர்.

இவ்வழக்கில், காதர் பக்ஷ் என்ற மாஜிஸ்ட்ரேட் வேறு கோர்ட்டாகிய சப் கோர்ட்டை அவமதித்துப் பேசி, தம்முன் வழக்கு நடத்திய வக்கீலை பயமுறுத்தியதால் 'கோர்ட்டை அவமதித்த' குற்றம் செய்தார் என்றும், அவர் மன்னிப்புக் கேட்டுக் கொண்டபடியால் அவருக்கு ரூ. 50 மட்டில் அபராதம், அதைக் கொடுக்காவிட்டால் ஒரு மாத சிறை வாசமும் அடையும்படி தண்டித்துத் தீர்ப்பளித்தனர்.

சேர்ந்த 'காம்பவுண்ட்' என்று சொல்லக் கூடிய நிலம்) இவைகளின் பேரில் மட்டில் ஒத்தி ஏற்பட்டிருந்தால் தொகைக் குறைவு ஏற்படாது. வீடு சம்பந்தமில்லாத தனிக் காலி மனையின் பேரில் ஒரு விவசாயியால் ஒத்தி ஏற்படுத்தப்பட்டிருந்தால் தொகைக் குறைவு ஏற்படும்.

கேள்வி: (L 2326 பழனிச்சாமிக் கவுண்டர், காங்கயம்) ஒரு அடமானத்தின் வட்டியும் முதலும் சேர்த்துப் போக்கியம் வைத்தால் புதுச் சட்டப்படி வட்டியை நீக்கி அசலுக்கு மாத்திரம் போக்கியமா? வட்டியும் அசலும் சேர்ந்த தொகைக்குப் போக்கியமா?

பதில்: போக்கிய தஸ்தவேஜியில் எந்தத் தொகை அசலாக காணப்பட்டிருக்கிறதோ அதுதான் அசல். ஆனல் ஒரு விதிவிலக்கு இருக்கின்றது. போக்கிய சொத்துக்கள் கடன் வாங்கியவருக்கே குத்தகைக்கு விடப்பட்டிருந்தால், புதிதாகச் சேர்ந்த வட்டியை நீக்கி அசல் கணக்குச் செய்யவேண்டும்.

கேள்வி: (L 2337 ராமய்யா, அம்பாசமுத்திரம்) ஒருவர் குறிப்பிட்ட கடனுக்குச் சொத்துக்களைப் பராதீனம் செய்து விட்டு இன்ஸால்வெண்ட் மனுக் கொடுத்தால் ஷெ பராதீனம் செல்லுமா?

பதில்: பராதீனம் எற்பட்டு மூன்று மாதங்களுக்குள் பராதீனம் செய்தவரை இன்ஸால்வெண்ட்டாக்க மனுக் கொடுக்கப் பட்டால் அப்பராதீனம் செல்லாது.

கேள்வி: (ஷை) ஒரு இன்ஸால்வெண்டால் குறிப்பிட்ட கடன்களுக்கு நிறுத்தல் போட்டுப் பராதீனம் செய்து ஷெ கடனும் தீர்க்கப்பட்ட பிறகு ஷெ பராதீனம் செல்லப்படுவதில்லை என்று ஏற்பட்டால் பராதீனம் பெற்றவருக்கு ரேடபிள் உண்டா?

பதில்: உண்மையான கடன்கள் தீர்க்கப்பட்டிருந்தால் அவைகளுக்கு மட்டில் (ரேடபிள்) விதாசாரம் கிடைக்கும்.

கேள்வி: (L 2370 சச்சி, கரடிப் பட்டி) ஒருவருக்கு மூன்று ஆண் மக்கள். அதில் மூத்த மகன் கலியாணமாகி, குழந்தைகள் இல்லாமல், இறந்து விட்டான். இறந்த மகனுடைய மனைவிக்குத் தகப்பன் தன் சொத்தில் ஜீவனும்சம் கிடைக்கும்படி பத்திரம் எழுதிவைத்து அவரும் இறந்து விட்டார். இறந்த தகப்பன் சொத்துக்களுக்கு யார் வார்சு? ஜீவனும்சம் பெறும் மருமகளுக்கு ஏதாவது பாத்தியமுண்டா?

பதில்: மகன்கள்தான் வார்சு. மருமகளுக்கு வார்சு பாத்தியம் கிடையாது. (இப்போது சட்டசபையில் இருக்கும் ஹிந்து சட்டத் தொகுப்பு மசோதா சட்டமானல் மருமகளும் வார்சாவாள்.)

கேள்வி: (L 2385 புதுவை நாயகம்) சில சீதன (மஞ்சட் காணி) ச் சொத்தை வைத்துவிட்டு இறந்துபோன ஒரு ஹிந்து ஸ்திரீக்கு இரண்டு மகன்களும், கலியாணமான இரண்டு பெண்களும், கலியாணமாகாத ஒரு பெண்ணும் இருந்தால் அச் சொத்துக்கு யார் வார்சு?

பதில்: கலியாணமாகாத பெண்.

கேள்வி: (L 2388 வேலு, ஆயிங்குடி) ஒருவர் ஒரு வீடுகட்டி முப்பது வருடங்கள் ஆகிவிட்டன. வீடு இருக்கும் நிலம் ஒரு முதலாளியின் நிலம். முதலாளி வீட்டைப் பிரிக்கும்படி சொல்ல முடியுமா?

பதில்: நிலத்தின் சொந்தக்காரருக்கும், வீடு கட்டியவருக்கும் உள்ள ஒப்பந்தம் அல்லது ஏற்பாட்டைப் பொறுத்தது.

கேள்வி: (ஷை) ஒருவர் நெடுங்காலமாக ஒரு பெண்ணைச் சேர்த்து வைத்திருந்து அந்தப் பெண்ணுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு அவருடைய சொத்தில் பாத்தியம் உண்டா?

பதில்: அவ்விதம் பிறக்கும் குழந்தைகளைப் போஷணை செய்யவேண்டிய கடமை தகப்பனுக்குண்டு. தகப்பன் இறந்த பிறகு (சில சந்தர்ப்பங்களில்) வைப்புக்குப் பிறந்த ஆண் குழந்தைகளுக்கு வார்சு பாத்தியமும் உண்டு.

கேள்வி: (L 2394 மருதப்பன் செட்டியார், கரிவலம்வந்தநல்லூர்) அவிபக்த

குடும்பமாக இருக்கும் காலத்தில் தகப்பன் தன் பெயருக்கு 1934-ல் ஒரு போக்கியத்தின் பேரில் கடன் கொடுத்து, 1946-ல் தகப்பனும், மகன்களும் பாகப்பிரிவினை செய்ததில் போக்கிய பாத்தியம் தகப்பன் பாகத்திற்குக் கிடைத்திருந்தால் திருத்தச் சட்டப்படி போக்கியத் தொகை பாதிக்கப் படுமா?

பதில்: பாதிக்கப்படாது.

கேள்வி: (L 2417 ஜான், பொன் மலை) ரூ. 2000-க்கு போக்கியம் வைத்து 50 வருடமாகிறது. போக்கிய ஷரத்துப்படி வருடம் 1-க்கு ரூ. 20 வீதம் பாதி கடன் கழிந்துவிட்டது. புதிய திருத்தச் சட்டப்படி போக்கியம் வாங்கியவர் சொத்தைவிட மறுக்கிறார். கோர்ட்டில் தாவா செய்ய, கோர்ட் பீஸ், ஸ்டாம்பு எவ்வளவு கட்டவேண்டும்? மனுப் போடலாமா?

பதில்: ஜாடா கடனும் ரத்தாகிவிட்டதென்று விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் செக்ஷன் 19-A படி மனுப் போடலாம்.

கேள்வி: (L 2418 மைனுதீன், டால்மியாபுரம்) ஒருவர் உயிருடன் இருக்கும்போது தம் சொத்தைப்பொறுத்து தம் இஷ்டப்படி எழுதிவைத்த உயில் அவர் இறந்த பின் முஸ்லீம் சட்டப்படி செல்லுபடியாகுமா?

பதில்: முஸ்லீம் சட்டப்படி 'வசியத்' என்ற உயில் சொத்தில் மூன்றில் ஒருபாகத்தைத்தான் கட்டுப்படுத்தும். அதற்கு மேல் சொத்துக்கள் 'வசியத்' மூலம் கொடுக்கப்பட்டிருந்தால், வார்சுகள் சம்மதித்தால் மட்டில் செல்லும். மேலும், வார்சுகளில் ஒருவருக்கு வசியத்து மூலம் சொத்துக் கொடுக்கப்பட்டிருந்தால், மற்ற வார்சுகள் சம்மதித்தாலொழிய செல்லாது.

கேள்வி: (L 2419 ரங்கய்யா, பம்பாய்) ஒருவருக்கு 5 மகன்கள். அவர் பூர்விக குடும்பச் சொத்தை வீண் செலவால் வந்த கடனுக்கு அடமானம் முதலிய வைத்து அதற்காக ஏற்பட்ட கோர்ட் நடவடிக்கைகளில் சொத்து ஏலம் போய்விட்டது. மேற்படி விஷயங்கள் நடக்கும்போது மைனராக இருந்த கடைசி மகன் அச்சொத்தை அடைய முடியுமா?

பதில்: முடியாது.

கேள்வி: (L 2421 P. P. நாயர், கோயமுத்தூர்) ஒருவர் முதலில் ஒரு ரிஜிஸ்டர் மணம் செய்துகொண்டு அவள் உயிருடன் இருக்கும்போது வேறு ஒரு ரிஜிஸ்டர் மணம் செய்துகொள்ளலாமா? அப்படிச் செய்துகொண்டால் எது செல்லும்?

பதில்: ஒரு மனைவி உயிருடன் இருக்கும்போது வேறு ரிஜிஸ்டர் மணம் செய்துகொள்ள முடியாது.

கேள்வி: (L 2423 இராஜகோபால், சேலம்) விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுப்பவர் அதில் கையொப்பமிட்டு அப்பத்திரம் ரிஜிஸ்டர் செய்யப்படாமலிருந்தால் செல்லுபடியாகுமா?

பதில்: ஸ்தாவர சொத்துக்கள் சம்பந்தமாக இருந்தால் செல்லாது.

கேள்வி: (L 2427 பக்கிரி செட்டி, நாகை) கடலைப் புண்ணாக்கு சில்லரையில் வைத்து வியாபாரம் செய்யலாமா?

பதில்: அது தங்கள் இஷ்டம். ஆனால், ஒரு தடவையில் ஒரு மணங்குக்கு மேல் விற்றால் சென்னை 1949 - ஆம் வருட சென்னை எரு வியாபாரிகள் லைசென்சு உத்தரவுப்படி லைசென்சு வாங்கிக்கொண்டு வியாபாரம் செய்ய வேண்டும்.

கேள்வி: (L 2434 பாலகிருஷ்ணன், திருச்சி) ஒரு கடை மூடுவதற்கு தினம் இரவு 11-மணியானால் அதை எந்த ஆபீசருக்குத் தெரியப்படுத்துவது?

பதில்: ஷாப் இன்ஸ்பெக்டர் அல்லது லேபர் கமிஷனருக்குத் தெரியப்படுத்தலாம். ஆனால், மூடித் திறக்கவேண்டிய மணி நேரம் பலவகைக் கடைகளுக்குக் கிடையாதென்று விதிவிலக்குகள் இருக்கின்றன.

கேள்வி: (L 2446 துரைசாமி, ஈரோடு) ஸ்டாம்பு பேபர் வாங்கின தேதி முதல் எத்தனை நாள் வரை உபயோகப்படுத்தலாம். எழுதிய பத்திரத்திற்கு ரீபண்டு வாங்க நேரிட்டால் எத்தனை நாளுக்குள் செய்ய

வேண்டும்? எழுதாத பத்திரத்திற்கு ரீபண்டு வாங்க எத்தனை நாளுக்குள் செய்ய வேண்டும்?

பதில்: எப்பொழுதும் உபயோகப் படுத்தலாம். பத்திரம் எழுதப்பட்டிருந் தால், அதில் கையெழுத்தான தேதியி லிருந்து ஆறு மாதத்திற்குள் ரீபண்டுக்கு மனுப்போட வேண்டும். ஸ்டாம்புகள் எழுதாமலே வீணுகப் போய்விட்டாலும் அதிலிருந்து ஆறுமாதங்களுக்குள் மனுப் போடலாம்.

கேள்வி: (L 2459 யூசுப்பு, போள்ளாச்சி) ஒரு மில்லில் வேலை செய்துவந்த 20 வயது சிப்பந்தியின் கால் யந்திரத்தில் சிக்கி அரைபட்டு இறந்தான். அவனுக்கு ஒரு அண்ணனும் (அவனை வளர்த்த) சிறிய தகப்பனும்தான் இருக்கிறார்கள். பேக்டரி சட்டப்படி நஷ்ட ஈடு யாருக்குச் சேரும்?

பதில்: 1923-ஆம் வருடத்திய வேலை யாட்களின் நஷ்டஈட்டுச் சட்டப்படி கேள்வி யில் கண்ட ஒருவருக்கும் நஷ்ட ஈடு கிடையாது.

கேள்வி: (L 2469 முத்துசாமி, மதுக் கூர்) தீப்பெட்டி விற்பனைக்கு விற்பனை வரி உண்டா?

பதில்: உண்டு.

கேள்வி: (L 2476 கோபாலகிருஷ் ணய்யர், ராஜபுரம்) ஒரு குடியிருக்கும் மனையை 25 வருடத்திற்கு முன் கிரயம் செய்து, கிரயம் வாங்கியவர் சுவாதீனத்தில் இல்லாமல் கிரயம் செய்தவர் சுவாதீனத்தி லேயே இருந்து இருவரும் இறந்துவிட்ட பிறகு கிரயதாரின் வார்சுகள் கிரயம் செய்த வரின் வார்சுகளை மனையைவிட்டு வெளி யேற்ற முடியுமா?

பதில்: கிரயம் செய்தவர் எவ்வகை ஏற்பாட்டின்பேரில் மனையை விற்ற பிறகும் அதைத் தன் வசமே வைத்துக்கொண் டிருந்தார் என்று தெரிய வேண்டும். யாதொரு ஏற்பாடு அல்லது ஒப்பந்தமும் இல்லாமல் விற்கப்பட்ட சொத்தை வாங் கியவர் வசம் கொடுக்காமலிருந்து 12 வரு டங்கள் ஆகிவிட்டால் காலாவதியாகிவிடும். கிரயம் பெற்றவரும் அவருடைய வார்சும் அச்சொத்தை இழப்பார்கள்.

கேள்வி: (L 2477 கோண்டா ரேட்டி, தென் ஆலப்பாக்கம்) ஒருவருக்குக் கலி யாணமாகி 10 வருடங்களாகியும் சந்ததி இல்லை. வேறு கலியாணம் செய்துகொள்ள மனைவி சம்மதிக்கவில்லை. சந்ததி இல்லை என்ற காரணத்தைக்கொண்டு விவாக ரத் துச் செய்துகொண்டு பிறகு வேறு கலியா ணம் செய்துகொள்ள முடியுமா?

பதில்: முடியாது. சந்ததி இல்லை என்பது விவாக ரத்துக்குப் போதுமான காரணமாகாது. விவாக ரத்து ஆகாமல் வேறு கலியாணம் செய்துகொள்ள முடியாது.

கேள்வி: (L 2478 அருணுசலம், அருங்குருக்கை) ஹிந்து சட்டப்படி ஒரு வர் சுயேச்சையாகச் சம்பாதித்த ஸ்தாவர, சங்கம சொத்துக்கள் இருக்கின்றன. அவ ருடைய மகன் இறந்து பேரப் பிள்ளைகள் மேஜராகி ஏக குடும்பத்தில் இருக்கும் போது, பேரப்பிள்ளைகளில் ஒருவர்மட்டில் பாகம் பிரித்துக் கொடுக்கும்படி கேட்க லாமா?

பதில்: ஒருவர் சுயமாகச் சம்பாதித்த சொத்தில் அவர் உயிருள்ள வரை வேறு ஒருவருக்கும் பாத்தியம் ஏற்படாது. அதைப் பிரித்துக்கொடுக்கும்படி பேரன் கேட்க முடியாது. ஆனல், அவர் அப்படி சுயமாகச் சம்பாதித்த சொத்தை, அவி பக்த குடும்ப சொத்துக்கள் இருந்தால், அவைகளுடன் சேர்க்காமல் தனியாக வைத்துக்கொள்ள வேண்டும். குடும்பச் சொத்துக்களுடன் கலந்தால் அதுவும் குடும்பச் சொத்தாகிவிடும். அப்பொழுது, பேரன் பாகம் கேட்கப் பாத்தியம் ஏற்படும்.

பத்திரங்கள் - ஸ்டாம்பு, ரிஜிஸ்டர் கட்டணம் உள்பட

[“வக்கீல்” 1949 அக்டோபர், நவம்பர், டிசம்பர் இதழ்களில் கிரயம், அடமானம் குத்தகை-வாடகை இவைகளுக்கான பத்திரங்களைப் பற்றியும் 1950 ஜனவரி இதழில் ‘செட்டில்மெண்ட்’ பத்திரங்களைப் பற்றியும் அவைகளுக்குரிய ஸ்டாம்பு, ரிஜிஸ்டர் கட்டணங்களையும் விபரமாய் எழுதியுள்ளோம்.]

“டிரஸ்டு” பத்திரங்கள்: “டிரஸ்டு” என்ற ஆங்கில வார்த்தைக்கு, “நம்பிக்கை” என்று பொருள். ஒருவர் தம்முடைய சொத்தை வேறு ஒருவருக்கோ அல்லது குறிப்பிட்ட காரியங்களுக்கோ உபயோகப் படவேண்டிய எண்ணத்துடன் ஒதுக்கி வைத்து, ஆனால், அச்சொத்தை நிர்வகிக்கவும், மேற்கண்டவிதம் உபயோகப்படுத்தவும் தமக்கே அதிகாரம் வைத்துக்கொண்டாலும், அல்லது, வேறு ஒருவருக்கு அதிகாரம் கொடுத்து, அவர் பெயருக்குச் சொத்தை மாற்றினாலும், அதற்காக அவர் எழுதும் நம்பிக்கைப் பத்திரத்துக்கு “டிரஸ்டு பத்திரம்” என்று பெயர். அதாவது, சொத்து யார் பெயரில் வைக்கப்படுகிறதோ அவர் டிரஸ்டு பத்திரத்தில் கண்ட விஷயங்களுக்கு அச்சொத்தையோ அதன் வரும்படியையோ உபயோகப்படுத்துவார் என்ற நம்பிக்கையின் பேரில் ஏற்படுத்தப் படும் பத்திரம்.

உதாரணங்கள்: (1) ஒருவர் தம்முடைய சில சொத்துக்களை ஒரு குறிப்பிட்ட தர்மம் செய்ய ஒதுக்கி வைக்கின்றார். அச்சொத்தைத் தாமே நிர்வாகம் செய்து, தர்மத்தையும் தாமே செய்துவரவேண்டியதென்றும் எழுதிக்கொள்ளலாம். அல்லது வேறு ஒருவருக்குச் சொத்தை மாற்றி அவரே அதில் கண்ட தர்மங்களை நடத்த வேண்டுமென்றும் ஏற்பாடு செய்யலாம். இவருக்கு, “டிரஸ்டி” தர்மகர்த்தா என்று பெயர். இதற்காக எழுதப்படும் பத்திரம் டிரஸ்டுப் பத்திரம்.

(2) ஒருவர் தம்முடைய சொத்துக்களை வேறு ஒருவருக்கு (“டிரஸ்டி”க்கு) மாற்றி, அவர் அச்சொத்துக்களை விற்றோ வேறு வகையில் பராதீனம் செய்தோ தம்முடைய கடன்காரர்களுக்குச் சேரவேண்டிய கடன் தொகைகளைக் கொடுத்து மிகுதி இருக்கும் சொத்தைத் திரும்பத் தம்மிடமே கொடுத்துவிட வேண்டுமென்று ஒரு பத்திரம் எழுதிவைக்கிறார். இது “டிரஸ்டு”ப் பத்திரம்.

(3) ஒருவர் தம்முடைய சொத்துக்களை நிர்வாகம் செய்து அவைகளின் வரும்படியிலிருந்து சில உறவினர்களுக்கு வருஷந்தோறும் குறிப்பிட்ட தொகைகள் கொடுத்தும், மிகுதி வரும்படியிலிருந்து சில தர்மங்கள் செய்யவும் ஏற்பாடு செய்து தம்மையும், வேறு ஒருவரையும் சேர்த்து டிரஸ்டிகளாக நியமித்து ஒரு பத்திரம் எழுதுகிறார். இது டிரஸ்டுப் பத்திரம்.

டிரஸ்டுப் பத்திரங்களில் வியக்தமாகவும், தெளிவாகவும் காணப்படவேண்டிய விஷயங்கள்:- எந்த காரியத்திற்காகப் பத்திரம் எழுதப்படுகிறது; டிரஸ்டுக்காக ஒதுக்கப்படும் சொத்துக்கள் எவை; டிரஸ்டிகள் யார்; யார் யாருடைய நன்மைக்காக டிரஸ்டுப் பத்திரம் எழுதப்படுகின்றது என்று காணப்படவேண்டும். தம்மையே டிரஸ்டியாக ஏற்படுத்திக்கொண்டால் அதையும் தெளிவாக எழுதி டிரஸ்டுப் பத்திரத்தில் பிரகடனம் செய்வதுடன் அப்பொறுப்பைத் தாமே மேற்கொண்டிருப்பதாகப்

பிழை திருத்தம்: “வக்கீல்” 1950 ஜனவரி மாத இதழில் பக்கம் 22 “செட்டில்மெண்ட் பத்திரங்களுக்கு ஸ்டாம்பு” என்ற தலைப்பின் கீழ் “ரூ. 5000 வரை அபராதம் விதிக்கப் படலாம்” என்று திருத்தி வாசிக்கவும்,

கண்ட்ரோல் - லைசென்ஸ் - ரேஷன் - விலை நிர்ணயம்
இதர சர்க்கார் அறிக்கைகள்

புண்ணக்கு (போக்கு-வரத்துக் கட்டுப்பாடு) உத்தரவு 1949

1943 - ல் இது சம்பந்தமாய் ஏற்பட்டிருந்த கட்டுப்பாடு உத்தரவை ரத்துச் செய்து ஒரு புது உத்திரவு ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது. இந்த உத்தரவு எவ்விதமான புண்ணக்குக்கும் உண்டு. இம் மாகாணத்தை விட்டு வெளியே வேறு மாகாணத்திற்காவது, சமஸ்தானத்திற்காவது அல்லது ஒரு ஜில்லாவை விட்டு வேறு ஜில்லாவுக்கு புண்ணக்கை எடுத்துக் கொண்டு போக அல்லது அனுப்ப விவசாய டைரக்டர் என்ற அதிகாரியிடமாவது அல்லது அவரால் அதிகாரம் கொடுக்கப்பட்டவரிடமிருந்தாவது அனுமதிச் சீட்டு (பர்மிட்) வாங்கிக்கொள்ள வேண்டும். எந்த மாதத்தில் புண்ணக்கு அனுப்பவேண்டுமோ அதற்கு முன் மாதம் 15 தேதிக்குள் மனுப்போட வேண்டும். பர்மிட்டில் கண்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குத் தான் பர்மிட் செல்லும். ரயில் அல்லது கப்பல் மூலம் புண்ணக்கு அனுப்பப்பட்டால் ரயில் அல்லது கப்பல் அதிகாரிகளிடம் பர்மிட்டைத் திருப்பிக் கொடுத்து விட வேண்டும். அவர்கள் அதில் புண்ணக்கு அனுப்பப்பட்ட விவரத்தை எழுதி டைரெக்டருக்கு அனுப்பிவிடுவார்கள்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

பத்திரத்தில் அறிவிக்க வேண்டும். வேறு டிரஸ்டிகள் நியமிக்கப்பட்டிருந்தால் டிரஸ்டுச் சொத்துக்களை அவர்கள் பெயருக்கு மாற்றுவதாக ஷரத்துக்கள் கண்டு எழுதப்பட வேண்டும்.

டிரஸ்டுப் பத்திரங்களுக்கு ஸ்டாம்பு: டிரஸ்டுப் பத்திரங்களிலும் சொத்தின் மதிப்பைக்காணவேண்டும். டிரஸ்டுப் பத்திரம் எழுதி வைப்பவர் தம்மையே டிரஸ்டியாக நியமித்துக்கொண்டு அப்பொறுப்பைத் தாமே மேற்கொண்டதாக மட்டில் எழுதிக் கொண்டால் அவ்வித டிரஸ்டுப் பத்திரங்களுக்கு, சொத்தின் மதிப்பின் பேரில், "செட்டில்மெண்ட்" பத்திரங்களுக்கு விதிக்கப்பட்டிருப்பவற்றைப் போலவே ஸ்டாம்பு வேண்டும். ஆனால் சொத்தின் மதிப்பு எவ்வளவாக இருந்தாலும் ரூ. 45/-க்கு ஸ்டாம்பு போதும்; அதற்கு மேல் வேண்டியதில்லை. ('செட்டில்மெண்ட்' பத்திரங்களுக்கான ஸ்டாம்பு 1950 ஜனவரி "வக்கீல்" இதழில் கொடுக்கப்பட்டிருக்கிறது.)

அப்படியல்லாமல், வேறு டிரஸ்டிகள் நியமித்து, அவர்களுக்குச் சொத்தை மாற்றி டிரஸ்ட் பத்திரம் எழுதினால் அந்தந்தப் பத்திரத்திற்கு வெவ்வேறான ஸ்டாம்பு விகிதம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. கடன் கொடுக்க வேண்டியவர் தம்முடைய சொத்துக்களைக் கடன் கொடுத்தவர்கள் நன்மைக்காக வேறு ஒருவருக்கு மாற்றினாலும், அல்லது கடன் கொடுத்தவர் ஒவ்வொருவருக்கும் வீதாசாரத் தொகை கொடுப்பதற்குத் தம்முடைய சொத்துக்களை ஜாமீனாகக்கண்டு எழுதினாலும், அல்லது தம்முடைய தொழிலை நடத்த ஏற்பாடுகள் செய்தாலும் இவ்விதமான பத்திரங்களுக்கு "காம்போசிஷன் டீட்" என்று பெயர். இதற்கு, சொத்தின் மதிப்பு எவ்வளவாக இருந்தாலும் ஸ்டாம்பு ரூ. 22—8—0.

அப்படி அல்லாமல் ஸ்தாவர சொத்துக்களை வேறு டிரஸ்டிகளுக்கு மாற்றி எழுதப்படும் டிரஸ்டு பத்திரங்களுக்கு, கிரயப் பத்திரங்களைப் போலவே ஸ்டாம்புவேண்டும். அதாவது, ரூ. 100 மதிப்புள்ள சொத்துக்கு ரூ. 3 வீதம் ஸ்டாம்பு வேண்டும். (கிரயபத்திர ஸ்டாம்பு, அட்டவணையைப் பார்க்கவும்.) ஆனால், சர்சார்ஜ் கிடையாது.

ரிஜிஸ்டர் கட்டணம்: 1950 ஜனவரி "வக்கீல்" இதழில் இருக்கும் ரிஜிஸ்டர் கட்டண அட்டவணைப்படியே.

பர்மிட் கொடுக்காமல் மறுக்கவும், கொடுத்த பர்மிட்டை ரத்துச் செய்யவும் டைரக்டருக்கு அதிகாரமுண்டு.

(27—12—49 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 217)

கருப்பஞ்சாறு பிழிய லைசென்ஸ்

குடிசைத் தொழில்கள் பற்றி சர்க்கார் விளக்கம்

ஜனவரி 13-ம் தேதியிட்ட சர்க்கார் அறிக்கை ஒன்று கூறுவதாவது:

1949-ம் வருஷத்திய சர்க்கரை ஆலை கட்டுப்பாடுச் சட்டத்தின்படி, சர்க்கார் குறிப்பிடும் தேதிக்குப் பின் எந்த ஆலையும் கரும்பு பிழியக்கூடாது. இதன்படி, விசாகைப்பட்டினம், கிழக்கு கோதாவரி, கிருஷ்ணா, பெல்லாரி, தென் ஆற்காடு, வட ஆற்காடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சினாப்பள்ளி, மதுரை, செங்கல்பட்டு, தஞ்சாவூர் ஆகிய ஜில்லாக்களில் உள்ள ஆலைகள், 1950 ஜனவரி 15-ம் தேதிக்குள் லைசென்ஸ் வாங்கவேண்டுமென்று சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனர்.

கருப்பஞ்சாறு பிழிவது, வெல்லமும், நாட்டுச் சர்க்கரையும் தயாரிப்பது முதலிய வேலைகள் குடிசைத் தொழிலாக நடைபெறும் இடங்களுக்கு, இந்த சட்டத்தில் காணப்படும் "ஆலைகள்" என்ற வார்த்தை பொருந்துமா என்பதுபற்றிச் சந்தேகம் எழுந்தது. கீழ்க்கண்ட அம்சங்கள் உள்ள இடங்களே தொழிற்சாலைகளாகக் கருதப்படும். இந்த அம்சங்கள் ஏதாவதொன்று இல்லையானால் அந்த இடம் தொழிற்சாலையாகக் கருதப்படாது. குடிசைத் தொழிலாகவே கருதப்படும்.

1. தொழில் நடக்குமிடத்தில் 10 பேரோ அல்லது அதற்கு அதிகமான ஆட்களோ வேலை செய்துகொண்டிருக்க வேண்டும்; அல்லது இதற்கு முந்தின 12 மாதங்களில் எப்பொழுதாவது வேலை செய்திருக்க வேண்டும்.

2. "வாக்கூம்பான்" என்ற சாதனத்தின் மூலம் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட வேண்டும்.

3. இதற்கு மின்சாரம் உபயோகிக்கப் பட வேண்டும்.

மேற்கண்ட அம்சங்களில் ஏதாவது ஒன்று இல்லையென்றாலும் அது ஆலையாகக் கருதப்படாது. இவை அனைத்தும் உள்ள தொழிற்சாலைகளே லைசென்ஸ் வாங்க வேண்டும்.

ஜவுளி

ஜவுளி வியாபாரிகள் கட்டுப்பாடு உத்தரவு-தெருவில் ஜவுளி விற்க லைசென்ஸ்

ஜவுளி வியாபாரிகள் கட்டுப்பாடு உத்தரவில், தெருவில் ஜவுளி விற்க ஒருவருக்கும் லைசென்ஸ் கொடுக்கக்கூடாதென்று இருந்தது இப்பொழுது ரத்துச் செய்யப்பட்டது. அதாவது, ஜவுளிகளை இனி தெருவில் தூக்கிக்கொண்டுபோய் விற்கலாம். ஆனால், அதற்கு ஒரு வருடத்திற்கு ரூ. 3. செலுத்தி, லைசென்ஸ் வாங்கிக்கொள்ள வேண்டும்.

மேலும், எந்த இடங்களில் போய் விற்பனை செய்யவும் இவர்களுக்கு ஒரே லைசென்ஸ் போதும். இப்போது கொடுக்கப்படும் லைசென்சு 31—3—1950 வரை செல்லும். இவர்கள் மற்றவகை ஜவுளி வியாபாரிகளைப் போல் கணக்குகள் வைத்துக்கொள்ள வேண்டியதில்லை. யாதொரு ரிடர்னும் அனுப்பவேண்டியதுமில்லை. ஆனால், மற்ற ஜவுளி வியாபாரிகளும், மொத்த கன்சைனிகளும் இவ்விதம் தெருவில் கொண்டுபோய் ஜவுளி விற்பனை செய்பவர்களுக்கு 1—7—1949-க்கு முன் மில்களில் மூட்டை கட்டப்பட்ட ஜவுளிகளைத்தான் விற்கலாம். அத்தேதிக்குப் பின் 'பாக்' செய்யப்பட்ட ஜவுளியை விற்கக்கூடாது. தெருவில் விற்க லைசென்சு பெற்றவர்கள் விற்பனை செய்யப் போகும் பொழுது எப்பொழுதும் லைசென்சைக் கையில் வைத்துக்கொண்டிருக்க வேண்டும். அதிகாரிகள் கேட்டால் காண்பிக்க வேண்டும். மேலும், இவர்கள் வாங்கும் ஜவுளிக்குப் பில்களை வைத்திருக்கவேண்டும்.

(3-1-1950 சென்னை சர்க்கார் கெஜட், பாகம் II, ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 1)

விற்பனை வரி விலக்கு

ஒரு நாட்டுச் செக்கு மட்டில் வைத்திருந்து அதிலிருந்து கிடைக்கும் சரக்குகளை மட்டில் வியாபாரம் செய்பவர்களுக்கு 1—4—1949 முதல் ஒரு வருடத்திற்கு விற்பனை வரி கிடையாதென்று ஏற்கனவே செய்யப்பட்டிருக்கும் உத்தரவில் அடியில் கண்டபடி சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது இவர்கள் மணிலாக்கொட்டை அல்லது பருப்பு வாங்கினால், அவர்களுடைய செக்கில் ஆட்டுவதற்கான அளவுக்கு இவர்கள் விற்பனை வரி கொடுக்கவும் வேண்டியதில்லை. இவர்கள் இவ்விதம் சொந்தச் செக்கில் உற்பத்தி செய்து விற்கும் எண்ணெய்க்கும் புண்ணாக்குக்கும் விற்பனை வரி கிடையாது.

(27-12-1949 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I பக்கம் 2341)

ஷாப் சட்டம்

சிப்பந்திகள் இல்லாத கடைகளுக்கு ஷாப்சட்டமே ஒரு வருடத்திற்குக் கிடையாது: ஒரு கடையின் சொந்தக்காரர் மாத்திரமோ அல்லது அவரும் அவருடைய பிரிபடாத குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மட்டிலுமோ எல்லா வேலைகளையும் செய்து கொண்டு, வேறு சிப்பந்திகள் ஒருவரையும் அமர்த்திக் கொள்ளாமலிருந்தால் அவ்வகைக் கடைகளுக்கு 3—1—1950-லிருந்து ஒரு வருடத்திற்கு ஷாப் சட்டத்தின் எந்த விதிகளும் கிடையாது. அதாவது இவ்விதமான கடைகளுக்கு இந்த ஒரு வருடம் ஷாப் சட்டம் அனுஷ்டிக்கப்படமாட்டாது.

(3-1-1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I பக்கம் 3)

கச்சா தோல் பதனிடுபவர்களுக்கு விதி விலக்கு: ஷாப் சட்டப்படி வாரத்தில் ஒரு நாள் கடை மூடப்படவேண்டுமென்ற விதி இனி கச்சா தோல்களைப் பதனிடும் வேலை செய்யும் கடைகளுக்குக் கிடையாது.

(3-1-1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I பக்கம் 3)

தொழிற்சாலைச் சட்ட இன்ஸ்பெக்டர்கள்: அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர் ஆப் லேபர் என்ற உத்தியோகஸ்தர்கள் அவரவர்களின் அதிகார எல்லைக்குள் தொழிற்சாலை (பாக்டரி) சட்டப்படி (அடிஷனல்) இன்ஸ்பெக்டராக நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆனால், இவர்கள் உத்தரவுகளை மறுபடி இவர்களே திருத்தவும், மாற்றவும் முடியாது. அப்படிச் செய்ய வேண்டியது அவசியமாகத் தோன்றினால் தொழிற்சாலை டிப்டி சீப் இன்ஸ்பெக்டருக்குத் தெரிவிக்க வேண்டும். மேலும், இவர்களுக்குக் கோர்ட்டில் பிராது (கம்பிளெயிண்ட்) கொடுக்கவோ, அனுமதிக்கவோ அதிகாரம் கிடையாது. தொழிற்சாலை (பாக்டரி)ச் சட்டம் 88, 89 செக்ஷன்களின்படி தொழிற்சாலைச் சொந்தக்காரர்களும், மானேஜர்களும் அனுப்பவேண்டிய நோட்டீஸ்களைத் தவிர மேற்படி சட்டப்படி அனுப்பவேண்டிய மற்ற எல்லா நோட்டீஸ்களும் புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் அடிஷனல் இன்ஸ்பெக்டர்களுக்குத்தான் அனுப்பவேண்டும். (செக்ஷன் 88 என்பது பாக்டரியில் நேரிடும் விபத்துக்கள் சம்பந்தமாய் நோட்டீஸ் அனுப்புவது. செக்ஷன் 89 என்பது வேலையாட்களுக்குச் சில வியாதிகள் வந்தால் நோட்டீஸ் அனுப்புவது.)

(3-1-1950 சென்னை சர்க்கார் கெஜட், பாகம் I பக்கம் 3)

ரயில்வே புக் ஸ்டால்களுக்கு
ஆறு மாதம் விதி விலக்கு

ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரங்களிலுள்ள புக் ஸ்டால்களுக்கு (புத்தகக் கடைகளுக்கு) 24—1—1950 தேதியிலிருந்து 6 மாதம்வரை ஷாப் சட்டத்தின் எந்த விதியும் அனுஷ்டிக்கப் படமாட்டாது.

(24-1-1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I பக்கம் 143

தஞ்சை ஜில்லா நெல் கடைகள்

தஞ்சை ஜில்லாவில் முக்கியமாய் நெல் வியாபாரம் செய்யும் கடைகளுக்கு ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் 15-ம் தேதி முதல் மே மாதம் 15-ம் தேதி வரையும்; மறுபடியும் செப்டம்பர் மாதம் 15-ம் தேதி முதல் நவம்பர் மாதம் 15-ம் தேதி வரையிலும் உள்ள காலங்களில் ஷாப் சட்டத்தின் அடியில்கண்ட விதிகள் கிடையாது: அதாவது. (1) தினசரி திறந்து மூடும் நேரம். (2) சிப்பந்திகள் தினசரி செய்யவேண்டிய வேலைநேரம் அதிக வேலைநேரம். (3) தினசரி தொடர்ந்த 12 மணி நேரத்திற்குள் வேலை நேரம் அமைய வேண்டும். (4) வாரம் ஒரு

நாள் கடை மூடவேண்டும். (5) ரிஜிஸ்டர்களும், நோட்டீசுகளும் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற விஷயங்கள் சம்பந்தமான 5 விதிகளும் மேற்கண்ட ஆறு மாதங்களுக்கு கிடையாது.

(24-1-1950 சென்னை சர்க்கார் கெஜட், பக்கம் 143)

திருச்சி ஜில்லா கோர்ட் புதுக்கோட்டையிலும் நடத்தலாம்: புதுக்கோட்டை திருச்சி ஜில்லா கோர்ட்டின் அதிகார எல்லைக்குள் இருக்கின்றது. ஆனால் புதுக்கோட்டையிலும் 1—1—1950 முதல் ஜில்லா கோர்ட்டை நடத்தலாமென்று சர்க்கார் உத்தரவு ஏற்பட்டிருக்கின்றது.

(*27-12-1949* சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I பக்கம் 2332)

மோட்டார் பஸ் விதிகள்

பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் மோட்டார் பஸ்களில் முன் பக்கத்திலும், பின்னும், எந்த எந்த ஊர்களுக்கிடையே அந்தப் பஸ் ஓடுகின்றதோ, அந்த இரண்டு ஊர்களின் பெயர்களையும் பிரதேச பாஷையிலும் தேவையானால் ஆங்கிலத்திலும் காண்பிக்க வேண்டுமென்றும், எழுத்துக்கள் சரியாகத் தெரியும் விதம் மூன்று அங்குல உயரத்திற்குக் குறையாமல் இருக்கவேண்டுமென்றும் ரூல்கள் 278, 279 மாற்றப்பட்டிருக்கின்றன.

(*3-1-1950* சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I ரூல் சப்ளிமெண்ட் பக்கம் *1*)

டிராமில் கூட்டத்தைத் தடுக்க விதிகள்: 1886-ஆம் வருடத்திய இந்தியன் டிராம் வேஸ் ஆக்டை அனுசரித்து, சென்னை சர்க்காரால் 1935-ல் ஏற்படுத்தப்பட்டிருக்கும் விதிகளில் கீழ்க்கண்டபடி புது விதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதாவது ஓடிக்கொண்டிருக்கும் ஒரு டிராம் காரில் டிரைவருக்குப்பக்கத்திலிருக்கும் பலகை அல்லது இடத்திலாவது, பம்பரிலாவது, டிராம் காரின் எந்த இடத்திலிருக்கும் படிகளிலாவது ஒருவரும் நிற்கவும் உட்காரவும் கூடாதென்றும் இதை மீறினால் ரூ. 20 அபராதம் விதிக்கப்படலாமென்றும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

(10-1-1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I A ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 3)

சென்னை ஜமீன்-இனம் ஒழிப்புச் சட்ட 'டிரிபுனல்' நியமனம்: ஜமீன் இனம் ஒழிப்புச் சட்டப்படி செட்டில்மெண்ட் ஆபீசர்களின் தீர்ப்பின் பேரில் அப்பீல் விசாரணை செய்யும் அதிகாரமும் இன்னும் அச்சட்டப்படி மற்ற அதிகாரங்களையும் கொண்ட 'டிரிபுனல்' என்ற விசேஷ கோர்ட்டுகளை சர்க்கார் நியமிக்கவேண்டும். இவ்வதிகாரத்தை அனுசரித்து சர்க்காரால் இப்பொழுது இரண்டு 'டிரிபுனல்கள்' நியமிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு டிரிபுனல் விஜயநகரத்திலும் மற்றொரு டிரிபுனல் மதுரையிலும் தலைமை ஆபீஸ் வைத்து நடத்துவார்கள்.

மதுரையில் தலைமை ஆபீஸ் உள்ள 'டிரிபுனல்': செங்கல்பட்டு, தஞ்சாவூர், தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயமுத்தூர், திருநெல்வேலி, ராமநாதபுரம், வட ஆற்காடு இந்த ஜில்லாக்களில் அதிகாரம் உண்டு. விஜயநகரத்தில் தலைமை ஆபீஸ் உள்ள 'டிரிபுனல்': விசாகபட்டணம், கிழக்கு கோதாவரி, மேற்கு கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர், நெல்லூர், கர்னூல், அனந்தப்பூர், பெல்லாரி, கடப்பை, சேலம். இந்த ஜில்லாக்களில் அதிகாரம் உண்டு.

ஒவ்வொரு 'டிரிபுன'லுக்கும் மூன்று அங்கத்தினர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

(17-1-1949 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I பக்கம் 101)

ஜமீன் இனம் ஒழிப்புச் சட்டப்படி நஷ்ட ஈடு கொடுக்க விதிகள்: ஜமீன் இனம் ஒழிப்புச் சட்டப்படி திறப்பாக மாற்றப்படும் கிராமங்களின் மேல் வாரத்தை அடைந்துவந்த ஜமீன்தாரர்களுக்கும், இனம் தாரர்களுக்கும் அச்சட்டத்தில் கண்டபடி நஷ்ட ஈடு தீர்மானிக்கப்பட்டு, சர்க்காரால் கொடுக்கப்படும். அவ்விதம் தீர்மானிக்கப்பட்ட நஷ்ட ஈட்டுத் தொகையை எப்படி எவ்வளவு கெடுக்களில் சர்க்காரால் கொடுக்கப்படுமென்று சில விதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவ்விதிகளாவன: (1) நஷ்ட ஈடு ரொக்கமாகக் கொடுக்கப்படும். (2) கோயில்கள், கல்வி ஸ்தாபனங்கள், தர்ம ஸ்தாபனங்கள் இவைகளுக்குச் சொந்தமில்லாத ஜமீன், இனம்

187694

கிராமங்களுக்குக் கொடுக்கவேண்டிய நஷ்ட ஈட்டுத் தொகையின் வருடாந்தர அடிப்படைத் தொகை (Basic annual sum) ரூ. 3000 - க்கு மேல் இல்லாதிருந்தால் நஷ்ட ஈடு ஒரே தடவையில் கொடுக்கப்படும்; வருடாந்தர அடிப்படைத் தொகை ரூ. 3000 - க்கு மேல் ரூ. 50,000 - க்கு மேற்படாமலிருந்தால் வருடம் ஒரு கெடுவாக மூன்று கொடுவுக்குள் கொடுக்கப்படும். அத்தொகை ரூ. 50,000 - க்கு மேல் இருந்தால் வருடம் ஒரு கெடுவாக ஐந்து கெடுவுக்குள் கொடுக்கப்படும். நஷ்ட ஈடு ஜாடாவுமோ, முதல் கெடுத் தொகையோ செட்டில் மெண்ட் முடிந்து ஆறு மாதத்திற்குள் கொடுக்கப்படும். கெடு, கெடுவாகக் கொடுக்கும் தொகைக்கு 3% வட்டி உண்டு. சர்க்காரால் கொடுக்கப்படும் நஷ்ட ஈட்டுத் தொகை டிரிபுனல் என்ற விசேஷ கோர்ட்டில் கட்டப்படும். கோயில்கள் முதலிய ஸ்தாபனங்களுக்குக் கொடுக்கவேண்டிய வருடாந்தர நஷ்ட ஈடு, கிராம பெரிஜில் குறைப்பதின் மூலமாகவாவது அந்தத் தாலூக்கா கஜானுவிலிருந்தாவது ரொக்கமாகக் கொடுக்கப்படும். இந்த விதிகள் 19—4—1949 முதல் அமுலுக்கு வந்ததாகப் பாவிக்கப்படும்.

(27-12-1949 சென்னை சர்க்கார் கெஜட், பாகம் I, ரூல் சப்ளிமெண்ட், பக்கம் 395)

இரும்பு, எஃகு விநியோகம்

விவசாய விஷயங்களுக்கான இரும்பு, உருக்குச் சாமான்கள் இதற்கென பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டு வழங்கப்படும் தனிக்கோட்டாவிலிருந்து கொடுக்கப்பட்டு வருகிறது.

தனிப்பட்டவர்கள் கட்டிடங்களின் தேவைகளுக்குக் கீழ்க்கண்ட கிரமப்படி முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, அதற்கேற்ப பொருள்கள் வழங்கப்படும் :—

1. இப்பொழுதுள்ள வீடுகளுக்கு அவசரமாகச் செய்யவேண்டிய ரிப்பேர்களுக்காக ;

2. இப்பொழுதுள்ள வீடுகள் அதிக அவசரமாகச் செய்யப்பட வேண்டிய விஸ்தரிப்பு வேலைகளுக்காக;

3. குடியிருப்பதற்காகப் புதிய வீடுகள் கட்டுவதற்காக;

4. உணவு தானியங்கள் கையிருப்பு வைத்துக் கொள்வதற்கான கிடங்குகள் கட்ட ;

5. புகையிலை கட்டுவதற்காக ;

6. ஷாப்புக்கள், ஹோட்டல்கள், இன்ஷூரன்ஸ் கம்பெனிகள், வியாபாரக் கம்பெனிகள் முதலியன கட்டுவதற்காக ;

7. பஸ் பாடிகள், மோட்டார் வண்டிகள் முதலியன கட்டுவதற்காக ;

8. போட்டுகள், லாஞ்சுகள் ரிப்பேர் செய்வதற்காக ;

9. போட்டுகள், லாஞ்சுகள் கட்டுவதற்காக ;

10. இதர சில்லரைக் காரியங்கள்

மனுதார்களுக்குப் பொருள்கள் சீக்கிரம் சப்ளை செய்யப்படாததற்குக் காரணம் பொதுவாக மனுக்கள் உரிய முறையில் சமர்ப்பிக்கப்படாததுதான். இதற்கெனப் பிரத்தியேகமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் பாரங்களில் சமர்ப்பிக்கப்படும் மனுக்களையே 'கண்ட்ரோல்ட் கம்மாடிட்டீஸ் டைரக்டர்' (Director of Controlled Commodities) கவனிப்பார். இந்த மனு பாரங்கள் கண்ட்ரோல்ட் கம்மாடிட்டீஸ் டைரக்டர் ஆபீஸிலும், தாசில்தார், டிஸ்டிரிக்ட் இண்டஸ்ட்ரீஸ் ஆபீஸ்களிலும் கிடைக்கும். மனுக்களுடன், கார்ப்பரேஷன், முனிசிபாலிடிகள், அல்லது பஞ்சாயத்துபோர்டு ஆகியவற்றின் அங்கீகாரம் பெற்ற விவரமான பிளானும் தகுந்த யோக்யதாம்சம் பெற்ற எஞ்சினீயரின் அத்தாட்சி பெற்ற விவரமான எஸ்டிமேட்டும் சமர்ப்பிக்கப்படவேண்டும். 10 ஹண்ட்ரெட் வெயிட்டுக்கு அதிகம் கோராத மனுதாரர்களின் எஸ்டிமேட்டுகள் எஞ்சினீயர்களின் அத்தாட்சி பெற வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அவர்கள் கோரும் அளவு தேவையென்பதற்கான விவரங்களைத் தெரிவிக்கவேண்டும். எல்லா மனுக்களும் அந்தந்த மனு பாரத்தில் குறிக்கப்பட்டிருக்கும் அதிகாரிகளின் மூலமாகவே சமர்ப்பிக்கப்படவேண்டும்.

(சென்னைச் செய்தி—ஜனவரி 1950)

Printed by DR. V. R. MURTY at the Homoeopathy Press, Banadurai, Kumbakonam. Edited and Published by R. NARASIMHAN B. A., B. L., at No. 73, Dabir West Street, Kumbakonam for Southern Book House Ltd.

கல்யாண ஸீஸனுக்கென்றே புதுப்புது டிஸைன்

பெங்களூர், காஞ்சீவரம், கும்பகோணம்

பட்டுச் சேலைகள்

ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம். தேவைக்கு உடனே முந்துங்கள்.

ரெங்கமூர்த்தி கம்பெனி

கெருடலாயத் தெரு, :: கும்பகோணம்.

பிராஞ்சுகள் :—மே. மே. வீதி, காரைக்குடி & நாட்டரசன்கோட்டை.

சாயத்திற்கு உத்திரவாதமுள்ள
அற்புத கலர்களில் கவர்ச்சி செய்யும் பார்டர்கள்
முந்திகள் அமைந்த எமது சொந்த கை நெசவு
ஜரிகை பட்டு & நூல் சேலைகள்

வேண்டியவற்றிற்கு ஆர்டர் கொடுங்கள்.

பிரிட்டிஷ் எம்பயர் எக்ஸிபிஷனில் மெடல் சர்டிபிகேட் பெற்ற

ராணி ரெங்கய்யர் ஸன்ஸ்

பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்

கெருடலாயத் தெரு — கும்பகோணம்

கிளை: 20, லெக்ஷிமிபுரம் 2-வது தெரு, மதுரை.

Regd. No. M. 5399

V. S. & Sons

SWEETS

குணத்திலும்

மணத்திலும்

நிகரற்றது

வி. எஸ். & ஸன்ஸ்

பெப்பர்மெண்டுகள்

தயாரிப்பவர்கள் :

தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலை

கும்பகோணம்

(Estd. 1925)

ஹோமியோபதி பிரஸ், கும்பகோணம்.